Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 9, 2021

செவ்வாய்க்கிழமை நவம்பர் 09, 2021 | ஒளி: 07 கதிர்: 148 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## படம் எடுக்கையில் சிரிக்கவே வேண்டாம்



வைபவங்களில் புகைப்படம் எடுக்கும் போது முகக் கவசத்தைக் கழற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் புகைப்படப்பிடிப்பாளர்களிடம் தாம் கோரிக்கை விடுப்பதாகவும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2






# விவசாயிகளின் பேரணியால் பதற்றம்

### மட்டக்களப்பு மாவட்டச் செயலகமும் முற்றுகை

வா.கிருஸ்ணா

மட்டக்களப்பில் நகருக்குள் பேரணியாக நுழைந்த விவசாயிகளால் நகரத்தில் பதற்ற நிலைமையேற்பட்டதுடன், மட்டக்களப்பு மாவட்டச் செயலகமும் முற்றுகையிடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு, செங்கலடி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதி விவசாயிகள் தங்கள் பகுதிகளிலிருந்து இன்று (08) காலை பேரணியாக மட்டக்களப்பு மாநகருக்கு வருகைதந்தனர்.

சுமார் 100க்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்களிலும் 100க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களிலும் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை தொங்கவிட்டவாறு விவசாயிகள் இதில் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி P2

## ரூ.160 கோடி இழப்பீடு கோருகிறது சீன நிறுவனம்

### 3 நாள்களுக்குள் செலுத்தாவிடின் சட்ட நடவடிக்கை

'அலட்சிய நடத்தை' காரணமாக ஏற்பட்ட சேதங்கள் மற்றும் நிறுவனத்தின் நற்பெயர் இழப்பு ஆகியவற்றுக்கான இழப்பீட்டுத் தொகையாக 8 மில்லியன் அமெரிக்க டொலர்களை (ரூ.160 கோடி) வழங்குமாறு கோரி, சீனாவின் சேதன உர உற்பத்தியாளரான குவின்டாவோ சீவின் பயோடெக் குறூப் கம்பனியானது, தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவைக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

தொடர்ச்சி P2

## அல்லைப்பிட்டியில் காணி சுவீகரிப்பு

உள்ளே
முயற்சி தடுத்து நிறுத்தம் 4



# தடுப்பூசி போடாவிடின் சட்ட நடவடிக்கை



முழுமையாக தடுப்பூசி போடாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமென சட்டமா அதிபர் அறிவித்துள்ளார் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் நேற்று (08) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோவை கைது செய்யவேண்டாமென வலியுறுத்தி, கிறிஸ்தவ மதத் தலைவர்கள், கொழும்பு உயர் நீதிமன்ற வளாகத்தில், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் நேற்று (08) ஈடுபட்டனர்.

## சிறில் காமினி கைதாக மாட்டார்

### சட்டமா அதிபர் தெரிவிப்பு

அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலி வழங்கிய முறைப்பாடு தொடர்பில், அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தற்போதைக்கு கைது செய்யப்படமாட்டார் என்று சட்டமா அதிபர், உயர் நீதிமன்றத்தில், நேற்று (08) உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2

## மூத்த முதுகலைப் பட்டதாரியான வரதா சண்முகநாதன்



இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த ஏழு பேரப் பிள்ளைகளின் பாட்டியான வரதா சண்முகநாதன் (வயது 87) என்பவர், கனடாவின் யோர்க் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் முதுகலைப் பட்டம்

தொடர்ச்சி P2

### 16 – 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு

## 93 சதவீதம் ஃபைசர் தடுப்பூசி கிழக்கில் செலுத்தப்பட்டுள்ளது



எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாணத்தில் 16 தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட 93 சதவீதமானவர்களுக்கு ஃபைசர் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக், நேற்று (08) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தலையசைக்க மொட்டு சிறிய தந்தை இல்லை

தீர்மானங்கள் எடுக்கும் இடத்தில் நாம் இல்லை எனத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாட்டின் தற்போதைய நிலையில் எவராலும் தனித்துச் செயற்பட முடியாது. அரசாங்கத்தின் பங்காளியாக நாம் இருந்தாலும் அரசாங்கத்தின் தீர்மானங்கள் அனைத்துக்கும் ஆதரவளிக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

தொடர்ச்சி P2



## ரூ.10,000 சம்பள அதிகரிப்பு வேண்டும்

### உள்நாட்டு இறைவரி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபாய் சம்பள அதிகரிப்புக் கோரி, உள்நாட்டு இறைவரி திணைக்கள ஊழியர்களால், திணைக்களத்துக்கு முன்பாக நேற்று (08) பிற்பகல் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## சீன கப்பல் களுத்துறை கடலில்



கொழும்பு துறைமுகத்தை அண்மித்து வந்த சீன சேதனப் பசளையை ஏற்றிய Hippo Spirit கப்பல், மீண்டும் களுத்துறையை அண்மித்த கடல் பகுதியில் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக கடற்படையின் போக்குவரத்து இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

## மஹிந்த வெற்றிக்கிண்ணப் போட்டிக்கு மாலைதீவு ஜனாதிபதி வருகைதந்தார்



நான்கு நாடுகளுக்கிடையில் நடைபெறவுள்ள 'மஹிந்த ராஜபக்ஷ வெற்றிக்கிண்ண சர்வதேச கால்பந்து' போட்டியின் ஆரம்ப விழாவுக்கு பிரதம அதிதியாக வருகைதந்த மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலியை, அமைச்சர்களான நாமல் ராஜபக்ஷ, சி.பி.ரத்னாயக்க ஆகியோர்,

தொடர்ச்சி P2



## அரசாங்கத்துக்குள் எதிர்க்கட்சி அமைப்பது சிதைக்கும் செயல்

மக்கள் எதிர்பார்ப்பை யதார்த்தமாக்கி பொதுத் தேசிய கொள்கைக்குள் நாட்டை அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பு எனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அரசாங்கத்துக்குள் எதிர்க்கட்சி அமைப்பது அரசியலமைப்பை சிதைக்கும் செயலாகும். எனவே, கலந்துரையாடல்களின் பின்னர் முடிவு பிரபலமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அனைவரும் கலந்துகொள்வது அவசியம் என்றார்.

தொடர்ச்சி P2



### பெய்யும் கடும் மழையால்

## 23 நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழியும்

நாட்டில் பெய்யும் கடும் மழையுடனான வானிலை காரணமாக 23 பிரதான நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழியும் நிலையில் உள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்தது.

தொடர்ச்சி P2

### ஐவரைக் காவு கொள்வதற்கு பெற்றோல் ஊற்றப்பட்டுள்ளது



## நீதிமன்றத்தில் பகுப்பாய்வு அறிக்கை

ஆ.ரமேஸ்.

ஐந்து உயிர்களைக் காவு கொண்ட இராகலை தீ விபத்து சம்பவத்துக்கு, பெற்றோல் பயன்படுத்தப்பட்டுள்ளது என, அரச இரசாயன பகுப்பாய்வு பிரிவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# விவசாயிகளின் பேரணியால் பதற்றம்

இந்தப் பேரணிகள், மட்டக்களப்பு நருக்குள் நுழைய முற்பட்ட போது, மட்டக்களப்பு விமான நிலைய சுமைதாங்கி பகுதியிலும் ஊறணி சந்தியிலும் பொலிஸாரால் தடைகள் ஏற்படுத்தப்பட்டு, உழவு இயந்திரங்கள் செல்வதற்கான அனுமதிகள் பொலிஸாரால் மறுக்கப்பட்டன.

இதன்போது, விவசாயிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலையேற்பட்டதுடன், விவசாயிகள் தாங்கள் போக்குவரத்துக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தமாட்டோம். அமைதியான முறையில் எங்களது போராட்டத்தை முன்னெடுக்கின்றோம், எங்களை தடுத்தால் வீதியை மறித்து போராட்டம் நடத்துவோம் என வீதியில் அமர்ந்து போராட்டம் நடத்த முற்பட்டனர்.

இதனையடுத்து அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது. அதனை தொடர்ந்து பொலிஸார் அவர்களை நகருக்கு செல்ல அனுமதித்த நிலையில், அமைதியான முறையில் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு காந்திப்பூங்கா வரையில் ஊர்வலமாக வந்து, பின்னர் மத்திய வீதியூடாக வாவிக்கரை வீதியை சென்றடைந்து அங்கிருந்து மாவட்டச் செயலகம் வரையில் பேரணி சென்றது.

மாவட்டச் செயலகத்தின் வாயிற்கதவை பொலிஸார் பஸ் கொண்டு மறித்தபோது, அதற்கு எதிராக விவசாயிகள் கடுமையான ஆட்சேபணையினை தெரிவித்ததுடன், குறித்த பஸ்ஸை அகற்றாவிட்டால், அப்பகுதியில் பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கப்போவதாகவும் விவசாயிகள் எச்சரித்ததை தொடர்ந்து பஸ் அங்கிருந்து அகற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து மாவட்டச் செயலகத்துக்குள் செல்வதை பொலிஸார் தடுத்தபோதும் முன்வாசல் ஊடாக மாவட்டச் செயலக வாசல் வரையில் விவசாயிகள் கோசங்களை எழுப்பியவாறு சென்றபோதிலும் மாவட்டச் செயலக உள்வாசல் கதவை பூட்டி விவசாயிகள் உள் நுழைவதை பொலிஸார் தடுத்தனர்.

இதன்போது மாவட்டச் செயலகத்திற்குள் யாரும் உள்நுழைய முடியாதவாறு வாயிற்கதவை முற்றுகையிட்டு விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணி நேரம் இந்த முற்றுகை போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், மாவட்டச் செயலாளர் கே.கருணாகரன், விவசாயிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் மகஜரையும் பெற்றுக்கொண்டதை தொடர்ந்து போராட்டம் முடிவுக்கு வந்தது.

முற்றுமுழுதாக சேதனப்பசளை திட்டம் என்பதை விவசாயிகள் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் 50 சதவீதம் சேதனப்பசளையை வழங்கினால் 50 சதவீதம் யூரியாவை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவேண்டும் என விவசாயிகள் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

# படம் எடுக்கையில் சிரிக்கவே வேண்டாம்

வைபவங்களில் புகைப்படம் எடுப்பதற்காக முகக் கவசங்களைக் கழற்றுவதை பலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர், இது அவ்வளவு நல்ல செயல் அல்ல என்று தெரிவித்த அவர், தண்ணீர் அல்லது உணவு அருந்துவது தவிர்ந்த எக்காரணத்துக்காகவும் முகக் கவசங்களை அகற்ற வேண்டாம் என்று வலியுறுத்தினார்.

திருமணங்கள் மற்றும் பிற விருந்துகள் அதிக எண்ணிக்கையில் நடத்தப்படுவதாகவும் இங்கே நாம் அதிகபட்ச வரம்பை அடையாமல் குறைந்தபட்ச எண்ணிக்கையைக் கொண்டு இந்தப் பணியை முடிக்க முடியுமா என்பது முக்கியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான ஒன்றுகூடல்கள் மூலம் மக்களின் சமூகத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது என்றும் இந்நோய் பரவாமல் தடுக்க நாம் முறையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

அனைத்து புகைப்படக்காரர்களும் புகைப்படம் எடுப்பதற்காக முகக்கவசங்களை அகற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று கோரிய அவர், எக்காரணம் கொண்டும் சில நிமிடங்களுக்கேனும் முகக்கவசத்தை அகற்ற வேண்டாம் என்றார்.

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி நாளாந்தம் அறிக்கையிடப்படுவோர முற்றாக முடிவடையவில்லையென்றாலும், பாடசாலைகளை நடத்துவது அவசியமான செயலாக இருந்த காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக மேலும் தெரிவித்தார்.

## ரூ.160 கோடி இழப்பீடு கோருகிறது சீன நிறுவனம்

தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவைக்கு ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்ட உர மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதுடன், பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு சில பக்டீரியா உள்ளிட்ட நுண்ணுயிர்கள் அதில் இருப்பதாக உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், தமது நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட சேதன உர மாதிரிகளில் எர்வினியா கலந்திருப்பதாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் பொய்யானவை என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் மேலதிக பணிப்பாளர் டொக்டர் டபிள்யூ. ஏ.ஆர். ரி.விக்கிரமாராச்சி தெரிவித்தார்.

மேலும், மூன்று நாள்களுக்குள் தமக்கான இழப்பீட்டை செலுத்த வேண்டும் என்றும் இல்லையெனில் நிறுவனம் அடுத்த சட்ட நடவடிக்கையை தொடரும் என்றும் கோரிக்கை கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனாவில் இருந்து மேற்குறிப்பிடப்பட்ட உரத்தை ஏற்றிய சரக்குக் கப்பல் நேற்று முன்தினம் இலங்கையின் பேருவளை கடற்பரப்புக்கு அண்மையாக கொழும்பு துறைமுகத்தை நோக்கி சென்றுகொண்டிருப்பதாக தகவல்களின் அடிப்படையில் அறிய முடிகிறது.

# தடுப்பூசி போடாவிடின் சட்ட நடவடிக்கை

எனினும், சம்பந்தப்பட்ட நபர்கள் பொது இடங்களுக்குச் செல்லும் போது கொவிட்-19 தடுப்பூசிகளின் இரண்டு டோஸ்களையும் பெறாதிருந்தால் மட்டுமே அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் நடைமுறைத்தன்மை கேள்விக்குறியாக உள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் முன்னர் தெரிவித்திருந்தார்.

நீண்டகால ஆய்வுகளுக்கு உற்படுத்தாமலேயே கொவிட் வைரஸ் தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன, இதில் பக்க விளைவுகளை கருத்தில் கொள்ளாது உயிரிழப்பை தடுக்கும் பிரதான நோக்கத்திலேயே தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன என்றும் தெரிவித்த அவர், இரண்டு தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்கு பயணிக்க முடியாது என்ற சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமென சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொவிட் வைரஸ் தடுப்பூசியின் தரம் குறித்து ஒருசில சர்வதேச அமைப்புகள் வெளிப்படுத்தும் தரவுகள் குறித்து ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார கேள்வி எழுப்பினார். பைசர், மொடேனா, ஜோன்சன் அன் ஜோன்சன் ஆகிய தடுப்பூசிகளின் தரம் குறைவாகியுள்ளதாக சர்வதேச நிறுவனமொன்று கருத்து வெளியிட்டுள்ளது.

இது உலக சுகாதார ஸ்தாபனம் ஏற்றுக்கொண்ட காரணியா? இலங்கையின் சுகாதார அமைச்சு இது குறித்து எவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளது என அவர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் தெரிவித்த சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகையில்,

அதேபோல் ஆய்வுகளை பொறுத்தவரை ஒரு தடுப்பூசியின் தரம் குறித்து குறைந்த பட்சம் பத்து ஆண்டுகளாவது முறையான ஆய்வுகளை மேற்கொண்டே பெறுபேறுகள் வெளியிடப்படும். ஆனால் உலகில் ஏற்பட்ட அவசரகால நிலைமையினாலும் மக்களின் இறப்பை கருத்தில் கொண்டும் அவசர நிலைமைகளுக்கு செல்ல வேண்டியுள்ளது. தடுப்பூசியினால் பக்க விளைவுகள் ஏற்பட்டாலும் கூட உயிரிழப்பை தடுக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டது. தடுப்பூசிகளை பயன்படுத்தலாம் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. அவர்கள் அங்கிகரித்த பின்னர் அது குறித்து தர்க்கம் செய்ய வேறு இடம் இல்லை. கொள்கை ரீதியில் வெவ்வேறு அறிக்கைகள் ஆய்வுகளில் வெளிப்படலாம். ஆனால் இது உலக சுகாதார ஸ்தாபனத்தின் அங்கிகாரத்துடன் ஒருபோதும் ஒத்துப்போகாது என்றார்.

## சிறில் காமினி கைதாகமாட்டார்

சிறில் காமினி பெர்னாண்டோ தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை பரிசீலணைக்கு எடுத்துக் கொண்ட போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ரொஹந்த அபேசூரிய, மேற்குறிப்பிட்ட விடயத்தை மன்றுக்கு அறிவித்தார்.

மனுதாரரைக் கைது செய்யும் எண்ணம் தமக்கு இல்லை என குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர், சட்டமா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அபேசூரிய, மன்றத்தில் தெரிவித்தார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக தமது திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் விசாரணைகள் முடிந்தவுடன் விசாரணைகளின் கருக்கங்கள் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் பணிப்பாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

மனுதாரரை தற்போதைக்கு கைது செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என தெரிவித்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரின் விசாரணை முடிவடைந்த பின்னர், சட்டமா அதிபர் உரிய முடிவை எடுப்பார் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்செகுலரத்ன, சி.ஐ.டியினரின் விசாரணைகளுக்கு உதவும் வகையில் வாக்குமூலமொன்றை வழங்குவதற்கு தமது கட்சிக்காரர் தயாராக இருப்பதாக நீதிமன்றில் அறிவித்தார்.

நீதியரசர் விஜித் மலல்கொட, நீதியரசர் எல்.டி.பி.தெஹிதெனிய மற்றும் நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம், இந்த மனுவை அடுத்த வருடம் ஏப்ரல் 4 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக தீர்மானித்தது.

## 93 சதவீதம் ஃபைசர் தடுப்பூசி கிழக்கில் ஏற்றப்பட்டுள்ளது

அத்துடன், 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு 93 சதவீதமானவர்களுக்கு முதலாவது தடுப்பூசியும் 82 சதவீதமானவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசியும் ஏற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை கடந்த நிலையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரணங்களும் சம்பவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

செப்டம்பர் மாதத்தில் இறுதிப் பகுதியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்பட்ட போதிலும் தற்போது அவ் எண்ணிக்கையில் சிறிதளவு குறைவு காணப்படுகின்றது. இருந்த போதிலும் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடையவில்லையெனவும் தெரிவித்தார்.

## தலையசைக்க மொட்டு சிறிய தந்தை இல்லை

அவர்கள் கூறும் அனைத்தையும் கேட்பதற்கு அவர்கள் எமது சிறிய தந்தை அல்ல என்றார்.

பொலன்னறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கலே, பொருள்களின் விலையேற்றத்துக்கு காரணமாகும். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி என்ற ரீதியில் அரசாங்கத்துடன் பல முறை நாம் கலந்துரையாடியுள்ளோம். கடிதம் மூலமும் அறிவித்துள்ளோம். அரசாங்கத்திடம் காரணங்களை முன்வைப்பது மாத்திரமே எமது பொறுப்பு.

இந்த கலந்துரையாடல்களின் போது, மக்கள் படும் அவஸ்தை, துயரம், வறுமை போன்றவை குறித்து போதுமானளவு நாம் உரையாடியுள்ளோம். எனவே, இதற்கான தீர்வை அரசாங்கமே எடுக்கவேண்டிய உள்ளது.

பொதுவாக கலந்துரையாடல்களில் தீர்மானங்களை எடுப்பது நாமல்ல எனத் தெரிவித்த அவர், இந்த விடயத்தில் சிறந்த தீர்மானங்களை எடுத்து மக்களைப் பாதுகாப்பதற்கான நிவாரண சலுகைகளை வழங்க வேண்டும்.

மேலும் கொரோனா குறைவடைந்துள்ளதால் நாடுபூராகவும் சென்று கட்சியை மறுசீரமைத்து, பலப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

தெளிவாக நாட்டுக்குள நாட்டை நேசிக்கும் நேர்மையான ஊழல், மோசடியற்ற மக்கள் நம்பிக்கையை வென்ற ஜனநாயகத்தை மதிப்பவர்களுடன் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

## அரசாங்கத்துக்குள் எதிர்க்கட்சி அமைப்பது சிதைக்கும் செயல்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று (8) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இன்று எமது நாட்டில் கூட்டணி அரசாங்கம் ஒன்றே உள்ளது. இக்கூட்டணி அரசாங்கத்துக்குள் பல கட்சிகள் இணைந்துள்ளன. அக்கட்சிகளுக்பென அடையாளங்கள் உள்ளன. எனவே அனைத்து காரணங்கள் தொடர்பிலும் 100 சதவீத இணக்கப்பாட்டுக்கு அனைத்து கட்சிகளும் வருவதில் சிக்கல்கள் ஏற்படலாம். எனினும், இது ஓர் அரசாங்கமாகும். அதில், பொதுக் கொள்கை காணப்பட வேண்டும். இதிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அனைத்து பங்குதாரர்களுடனும் ஒன்று கூடி கலந்துரையாடி ஒருமித்த கருத்துக்கு வரவேண்டும். பின்னர் அரசாங்கத்தின் அனைத்து பங்குதாரர்களும் அந்த முடிவுகளை அரசாங்கத்தின் பொதுவான கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

## மூத்த முதுகலைப்...

பெற்ற மிக வயதான நபராக மாறியுள்ளார் என, சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

“சுவாரஸ்யமாக இருந்தது. நவம்பர் முதலாம் திகதி, நான் ஒரு சாதாரண பெண்ணாக என் சாதாரண வாழ்க்கையைப் பற்றிக் கொண்டிருந்தேன். நவம்பர் இரண்டாம் திகதி, நான் பட்டம் பெற்றவுடன், எல்லாம் மாறிவிட்டது” என்று வரதா சண்முகநாதன் சீஎன்என் செய்தி சேவையிடம் தெரிவித்துள்ளார்.

“அரசியலைப் படித்து அதில் உயர் பட்டம் பெற வேண்டும் என்பதே எப்போதுமே எனது கனவு, இறுதியாக அதை அடைந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்” என்று அவர் கூறினார்.

இலங்கையில், வேலணை கிராமத்தில் பிறந்த வரதா சண்முகநாதனின் முதல் முதுகலை பட்டம் இதுவல்ல. இந்தியாவில் உள்ள மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டம் பெற்ற பின்னர், இந்திய வரலாறு மற்றும் ஆங்கிலத்தை கற்பிப்பதற்காக இலங்கை திரும்பினார்.

1990 இல், ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்காக லண்டனுக்குச் சென்றார். லண்டன் பல்கலைக்கழகத்தில் பயன்பாட்டு மொழியியலில் தனது முதல் முதுகலைப் பட்டத்தைப் பெற்றார்.

2004 இல் கனடாவுக்குக் குடிபெயர்ந்த அவர், தனது மகளுடன் இருந்து இந்தப் பட்டத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்றத்தில் பகுப்பாய்வு அறிக்கை

மேற்படி விவகாரம் தொடர்பிலான வழக்கு வலப்பனை நீதிமன்றத்தில் (08) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, இராகலை பொலிஸார், மேற்படி இரசாயன பகுப்பாய்வு அறிக்கையை சமர்ப்பித்தனர்.

இராகலை தோட்டம் இலக்கம் ஒன்று மத்திய பிரிவு தோட்டத்தில் 2021 ஒக்டோபர் 7ஆம் திகதி, இரவு தனி வீடு தீ விபத்து சம்பவம் இடம்பெற்றது. இச் சம்பவத்தில் குறித்த குடும்பத்தை சேர்ந்த தங்கையை இரவீந்திரன் வயது (27) என்பவர் உயிர் தப்பியிருந்தார். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவர், நீதிமன்றத்தின் உத்தரவின் ஊடாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில், மேலதிக ஆவணங்கள் இருப்பின் அவற்றையும் பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதவான், வழக்கு விசாரணையை எதிர்வரும் (22 ) ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## மஹிந்த வெற்றிக்கிண்ணப்...

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அழைப்பின் பேரிலேயே மலைதீவு ஜனாதிபதி வருகைதந்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ வெற்றிக்கிண்ண சர்வதேச கால்பந்து போட்டியில், இலங்கை, பங்களாதேஷ், மாலைத்தீவு மற்றும் சீஷெல்ஸ் ஆகிய நாடுகளின் அணிகள் பங்குப்பற்றவுள்ளன.

மலைத்தீவு ஜனாதிபதி, இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில், ஜனாதிபதி கோட்டாபய மற்றும் பிரதமர் மஹிந்த ஆகிகோரையும் சந்தித்து கலந்துரையாடுவார்.

## 23 நீர்த்தேக்கங்கள்...

மேலும் 12 முக்கிய நீர்த்தேக்கங்கள் நிரம்பியதால் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் நீர்ப்பாசன பணிப்பாளர், நீர் முகாமைத்துவ பொறியியலாளர் டி அபேசிறிவர்தன தெரிவித்தார். எதிர்வரும் நாட்களில் மழை பெய்தால் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தமது திணைக்களம் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, களுகங்கை மற்றும் குடா கங்கையை அண்மித்த பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான அபாயம் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

அதன்படி, பதுரலிய, புளத்சிங்கள, பாலிந்தநுவர, மில்லனிய, ஹொரணை, களுத்துறை, தொடங்கொடை பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் மக்களை அவதானத்துடன் இருக்குமாறு எச்சரித்துள்ள திணைக்களம், குறிப்பிட்ட பிரதேசங்களிலுள்ள தாழ்நில வீதிகளைப் பயன்படுத்தும் சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறும் கோரியுள்ளது.

## ரூ.10,000 சம்பள...

வாழ்க்கைச் செலவு முன்னெப்போதையும் விட அதிகரித்துள்ளதால் இந்த கோரிக்கை விடுக்கப்படுவதாக இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட உள்நாட்டு இறைவரி பொது ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஜித் புஷ்ப குமார தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

“பால்மா, எரிவாயு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களின் விலைகள் சமீப காலமாக முன்னெப்போதையும் விட அதிகரித்துள்ளதை நாம் அனைவரும் அறிவோம்.

முடி வெட்டுவது, மருந்து வாங்குவது அல்லது வேறு சேவையைப் பெறுவது என எங்களிடம் வசூலிக்கும் பணத்தை அதிகப்படுத்தியுள்ளனர். எனவே, ஒட்டுமொத்த அரச ஊழியர், தோட்டத் தொழிலாளி, தனியார் நிறுவன ஊழியர் ஆகியோர் இன்று வாழ்வாதாரத்தை மேற்கொள்வது சிரமமாக உள்ளது.

எனவே, அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேறு வழியில்லை. சம்பளம் அரசாங்கத்தால் வழங்கப்படுவதால் அவர்களிடம் கோரிக்கை விடுக்கிறோம். வாழ்க்கைச் செலவு கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால் அரச ஊழியர்கள் உள்ளிட்ட உழைக்கும் மக்கள் இன்று தலைகுப்புற விழுந்துள்ளனர்” என்றார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில்

# 68,000 வீதிகள் அபிவிருத்திக்காக அடையாளம்



நாட்டில் 68,000 வீதிகள் ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் அபிவிருத்திக்காக அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருதுத் தெரிவித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் கூறியதாவது: இவற்றில் 14,000 வீதிகளின் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1,500 வீதிகள் நிர்மாணிக்கப்பட்டு, மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன. அடுத்த மூன்று மாதங்களுக்குள் மேலும் 2,500 வீதிகள் திறக்கப்படும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொரோனா நெருக்கடி நிலை இருந்த போதிலும் நாட்டின் நெடுஞ்சாலை அபிவிருத்திகளை தொடர ஜனாதிபதி எங்களுக்கு அறிவுறுத்தினார்.

நாட்டில் கொரோனா பரவுவதைத் தடுப்பதற்காக அரசாங்கம் அவ்வப்போது பயணக் கட்டுப்பாடுகளை அமல்படுத்திய போதிலும், நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதி அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல்களுக்கு அமைவாகவே முன்னெடுக்கப்பட்டன. இதன் காரணமாக இந்த 1,500 வீதிகளை மக்களிடம் கையளிக்க முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது என்றார்.

ஜனாதிபதியோ பிரதமரோ

# எம்மை அழைக்கவே இல்லை

கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர், கட்சி தலைவர்கள் என்ற அடிப்படையில், ஒரு தடவையேனும் ஜனாதிபதியோ பிரதமரோ தம்மை அழைத்துக் கலந்துரையாடியதில்லை என ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றம் சாட்டினார்.



அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகள் தனித்துக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதன், பின்னணி தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, மக்களின் பிரச்சினை, நாட்டின் பொருளாதார பிரச்சினையைப் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்தில் இருக்கும் 11 பங்காளி கட்சிகளும் ஒன்றிணைந்து கலந்துரையாடி வருகின்றன.

பங்காளிக் கட்சிகளின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவி சாய்க்க வேண்டும். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கலந்துரையாடல்களுக்கு, எம்மையும் அழைக்க வேண்டும். மேலும், இதனைச் செய்யத் தவறினால் எமக்கு மாற்றுவழி ஒன்றைத் தேடிக்கொள்ள வேண்டிவருமெனவும் தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகான அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளின் கோரிக்கைக்கு அரசாங்கம் மதிப்பளித்து செயற்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.



இந்தியா – இலங்கை

# இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும்

இந்தியா மற்றும் இலங்கைக்கிடையே தற்போதுள்ள இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்புத் திட்டங்களை மேலும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாடியதாக உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்தார்.

இந்தியாவின் நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சர் ஸ்ரீமதி நிர்மலா சீதாராமனை இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட அண்மையில் சந்தித்தார். இச்சந்திப்பு புதுடெல்லியில் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது இலங்கைக்கான தனது விஜயங்களை நினைவுகூர்ந்த இந்திய அமைச்சர் சீதாராமன், உயர்ஸ்தானிகர் மொரகொடவை அன்புடன் வரவேற்றார்.

இந்தியாவின் நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சர் மற்றும் இலங்கை உயர்ஸ்தானிகர் ஆகியோர் இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர்.

தனது பொருளாதார ஒத்துழைப்புத் திட்டங்களின் மூலம் இலங்கைக்கு பல்வேறு துறைகளில் வழங்கிய

**“ இந்தியாவில் இலங்கை இராஜதந்திர பணிகளுக்கான ஒருங்கிணைந்த நாடு மூலோபாயம் 2021/2023 என்ற கொள்கை வரைபடத்தின் பிரதியை, அமைச்சரிடம் மொரகொட வழங்கி வைத்தார்**

ஆதரவுக்காக உயர்ஸ்தானிகர் மொரகொட நிதி அமைச்சருக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்தியாவில் இலங்கை இராஜதந்திர பணிகளுக்கான ஒருங்கிணைந்த நாடு மூலோபாயம் 2021/2023 என்ற தனது கொள்கை வரைபடத்தின் பிரதியை நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சரிடம் உயர்ஸ்தானிகர் மொரகொட வழங்கி வைத்தார்.தொழில் ரீதியாக பொருளாதார நிபுணரான ஸ்ரீமதி நிர்மலா சீதாராமன், மே 2019 முதல் இந்தியாவின் நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சராக செயற்பட்டு வருகின்றார். அதற்கு முன்பு 2017 முதல் 2019 வரை அவர் பாதுகாப்பு அமைச்சராக செயற்பட்டார். மாநில நிதி அமைச்சராகவும் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சின் மாநில அமைச்சராகவும் (சுயாதீனப் பொறுப்பு) ஸ்ரீமதி சீதாராமன் பணியாற்றியுள்ளார்.



# தனித் தீவாக 90 குடும்பங்கள் ஊற்றுப் புலத்தில் சிக்கவுள்ளன

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சிக்கவுள்ள மக்கள் கோரிக்கை

■ யது பாஸ்கரன்

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஊற்று புலம் பகுதியில், வீதி அபிவிருத்தி பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வள்ளுவர் பண்ணையையும் நாவலர் பண்ணையையும் இணைக்கும் வீதியில் அமைந்துள்ள பாலத்தின் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் குறித்த வீதி ஊடான வாகனப் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக அமைக்கப்பட்ட வீதிக்கு மேலாக குளத்து நீர் தேங்கி நிற்பதால், வாகனப் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அவசர தேவையின் நிமித்தம் செல்பவர்கள், தொழிலுக்குச் செல்பவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நோயாளர்களை அழைத்துச் செல்வதிலும், மாணவர்கள் பாடசாலை செல்வதிலும் பாரிய சவால்கள் காணப்படுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வாகனங்களை மறுபுறத்தில் நிறுத்திவிட்டு நோயாளர்களை தூக்கியே கடக்க வேண்டிய நிலை தற்போது உள்ளதாகவும் தொடர்ந்து மழை பெய்தால், முற்றாகப் போக்குவரத்து தடைப்பட்டு 90 குடும்பங்களும் தனியாக நீர் சூழ்ந்த பிரதேசத்தில் சிக்கிக்கொள்ளும் அபாய நிலை காணப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த வீதியானது, புதுமுறிப்பு குளத்தின் அலைகரை பகுதியை ஊடறுத்துச் செய்வதால், தொடர்ந்தும் இந்த நிலை காணப்படும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

19 அடி கொள்ளளவு கொண்ட புதுமுறிப்பு குளத்தின் நீர்மட்டம் தற்போது, 16 அடி 1 அங்குலமாகக் காணப்படுகின்றது. குளத்தில் தொடர்ந்தும் நீர் சேர்வதால், நீர்மட்டம் அதிகரித்து போக்குவரத்து துண்டிக்கப்படும் அபாய நிலை காணப்படும்.

இந்த நிலையில், உடனடியாக மாற்று நடவடிக்கை மேற்கொண்டு தருமாறு மக்கள் கோருகின்றனர்.

‘எவோட்ஸ் 2021’

# கட்டுரைப் போட்டிக்கான பரிசளிப்பு விழா

புதிய அலை கலை வட்டத்தின் ‘எவோட்ஸ் 2021’ கலை, கலாசார கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் கொழும்பு-13, கதிரேசன் வீதியிலுள்ள ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, கலாபூசணம் கவிஞர் மேமன்கவி, பாடகர் என். ரகுநாதன் ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட புரவலர் ஹாசிம் உமர், கலாபூசணம் விருது பெற்றவர்களை கௌரவித்ததுடன் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளையும் வழங்கி வைத்தார்.

இதில், ஜனாபா றிஸ்மிய ஹமீத், வை.சஜனி, வை.மோகதாசன் ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளைப்பெற்றனர்.

(படங்கள்: எம். நசார்)





நுவரெலியா– தலவாக்கலை

# நுவரெலியா– தலவாக்கலை நடுவீதியில் மண்திட்டு விழுந்தது

■ டி.ஷங்கீதன்

மலையகத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கன மழை காரணமாக, பல இடங்களிலும் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இதனால், போக்குவரத்தும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா- தலவாக்கலை பிரதான வீதியில் நேற்று (08) மாலை 3 மணியளவில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக பல மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

நுவரெலியாவில் இருந்து சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தில் பிளக்பூல் பகுதியிலேயே மண் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால், பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன் சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்திற்கு வாகன நெரிசலும் ஏற்பட்டிருந்தது.

ஸ்தலத்துக்கு உடனடியாக விரைந்த போக்குவரத்து பொலிஸாரும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும், சரிந்திருந்த மண்ணை அப்புறப்படுத்தி, போக்குவரத்தை சீர் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

**“ நானுஓயா, லிந்துலை, அக்கரப்பத்தனை, தலவாக்கலை, கொட்டகலை, ஹட்டன் நோக்கி பயணித்தவர்கள் சிரமப்பட்டனர்**

பாடசாலையை முடித்துக்கொண்டு திரும்பிய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், கடமைகளை நிறைவு செய்து கொண்டு தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிய அரச, தனியார் துறைகளைச் சேர்ந்தவர்களும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர்.

நானுஓயா, லிந்துலை, அக்கரப்பத்தனை, தலவாக்கலை, கொட்டகலை, ஹட்டன் ஆகிய பகுதிகளை நோக்கி பயணித்த பயணிகளே பெரிதும் சிரமப்பட்டனர்.



பேலியகொடை மெனிங் சந்தைக்கு வரும்

# மரக்கறிகளின் தொகையில் 60 சதவீத வீழ்ச்சி

பேலியகொடை மெனிங் காய்கறி சந்தைக்கு வரும் மரக்கறிகளின் தொகையானது 60 சதவீதமாக குறைந்துள்ளதாக மெனிங் சந்தை பொது வர்த்தக சங்கத்தின் தலைவர் எச்.எம். உபசேன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, இரசாயன பசளைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நாட்டில் உள்ள பொருளாதார மத்திய நிலையங்களுக்குக் கிடைக்கும் மரக்கறிகளின் தொகை குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தைக்குக் கிடைக்கும் மரக்கறிகளின் தொகையானது எதிர்வரும் நாள்களில் குறைந்தால், தட்டுப்பாடு ஏற்பட்டு, மரக்கறிகளைக் கொள்வனவு செய்யவும் மக்கள் வரிசைகளில் நிற்கும் நிலைமை ஏற்படும் என அவர்கள்



சுட்டிக்காட்டியுள்ளனர்.

சந்தைக்குக் கிடைக்கும் மரக்கறிகளின் தொகை குறைந்துள்ளதால், அவற்றின் மொத்த விற்பனை விலைகளும் அதிகரித்துள்ளதாக மெனிங் சந்தை பொது வர்த்தக சங்கத்தின் தலைவர் எச். எம்.உபசேன தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் தலைமைகள்

# மலினப்படுவதை ஏற்க முடியாது

முஸ்லிம் தலைமைகள் தொடர்ச்சியாக மலினப்படுத்தப்படுவதை, முஸ்லிம்கள் இனி ஒருபோதும் ஏற்கத் தயாரில்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாவிதன்வெளி அமைப்பாளர் சித்தீக் நதீர் தெரிவித்தார்.



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் நாவிதன்வெளி முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின் போதே இவ்வாறு அமைப்பாளர் சித்தீக் நதீர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

முஸ்லிம் சமூகத்தை அடக்கி, ஒடுக்கி ஆள நினைக்கும் இந்த அரசாங்கம், முதற் கட்டமாக முஸ்லிம் தலைமைகளை மலினப்படுத்தி உடல் ரீதியாகப் பலமிழக்கச் செய்யும் கைங்கரியத்தை மேற்கொண்டு வருகிறது. உள ரீதியாக மலினப்படுத்தி பின்னர், உடல் ரீதியாகப் பலமிழக்கச் செய்வதே இவர்களின் நோக்கம்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரான ரிஷாத் பதியுதீனை அநியாயமாக சிறைப் பிடித்தனர்.அவர் ஆரோக்கியமாகத்தான் இருந்தார். சிறையில் இருதய நோய்க்கு உள்ளானார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பல நாள் சிகிச்சை பெற்றார். இப்போதும் அவர், அதற்கான சிகிச்சையை பெறுகிறார்.

அதேபோல், ஆஸாத் சாலி. எவ்வளவு திடகாத்திரமான தலைமை அவர். அவருக்கும் சிறை சென்றபோது இருதய நோய் ஏற்பட்டது. இப்போது வழக்கு விசாரணைக்கு சக்கர கதிரையில் அழைத்து வரப்படுகின்றார்.

ஆக, முஸ்லிம் தலைமைகளை உடல் ரீதியாக பலமிழக்கச் செய்யும் முயற்சி இங்கு அரங்கேற்றப்படுகின்றது. இவைகளை கண்டு முஸ்லிம் சமுகம் கொதிப்படைந்து போயுள்ளது.

எமது தலைமைகளை பலவீனப்படுத்தும் முயற்சிகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கமும் இந்தச் செயற்பாட்டை உடன் நிறுத்த வேண்டுமெனவும் நாவிதன்வெளி அமைப்பாளர் சித்தீக் நதீர் தெரிவித்தார்.

### கோட்டா அரசாங்கத்தை

# வீட்டுக்கு அனுப்ப வேண்டும்

■ என்.ராஜ்

கோட்டாபய அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என, மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் விமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில், நேற்று (08) 'ஊரிலிருந்து தொடங்குவோம்' என்னும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தற்போதுள்ள அரசாங்கமானது மக்களை ஏமாற்றும் தனது நாடகத்தை அரங்கேற்றி வருவதாகவும் குறிப்பாக இராணுவத்தைப் பயன்படுத்தி, சேதன விவசாயத்தை வலுக்கட்டாயமாகத் தான் முன்னெடுப்பேன் என, ஜனாதிபதி தெரிவிக்கும் அளவுக்கு,



இந்த நாட்டில் அராஜகம் காணப்படுகின்றது.

பச்சை, நீலம், சிவப்பு எனப் பார்த்தால், எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், மக்கள் இன்னல்களை முகம் கொடுக்கின்றார்கள்.

நாட்டில் ஒரு கோடி மக்கள் விவசாயிகளாக உள்ள நிலையில், நெற்கதிர் என்றால் என்ன என்று தெரியாத ஜனாதிபதி தான், தற்போது விவசாய புரட்சி ஏற்படுத்துவதாகக் கூறி, மக்களை ஏமாற்றி வருகின்றார்.

விவசாயப் பெருமக்களுடன் கலந்துரையாடித்தான் சில முடிவுகளை எடுக்க வேண்டும். ஆனால், விவசாயி இல்லாதவரும் விவசாயத் துறையைப் பற்றித் தெரியாத ஒருவர், நாட்டில் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்குரிய தீர்மானங்களை எடுப்பது, ஒரு வியப்பான விடயமாகும்.

எனவே, எதிர்வரும் காலத்தில் அனைவரும் ஒன்றிணைந்து ஆட்சியை மாற்றி, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.



# சுவர் இடிந்ததில் தொழிலாளி பலி

க. அகரன்

வவுனியா, ஓமந்தை பகுதியில் அமைந்துள்ள ஈயத் தொழிற்சாலையில், நேற்று முன்தினம் (07), சுவர் இடிந்து வீழ்ந்து, ஊழியர் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தொழிற்சாலையின் இயந்திரப் பகுதிக்குள் ஈயத்தினை உருக்குவதற்காக பயன்படுத்தப்படும் கற்சுவரை, உடைத்துக்கொண்டிருந்த போதே, இவ்வனர்த்தம் சம்பவித்துள்ளது.

சம்பவத்தில் மாத்தளைப் பகுதியை சேர்ந்த வேலு உதயராஜ் (வயது 37) என்ற நபரே, இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# மரக் கன்றுகள் விநியோகம்



வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால், நேற்று முன்தினம் (07) வடமராட்சி, அல்வாயிலுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகளிடம், மரக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



# பக்க பாதைகளால் வெள்ள அபாயம்

■ நடராஜா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, பூநகரி, பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து பாலாவி வரையான வீதிப் புனரமைப்புகளுக்கென அமைக்கப்பட்ட பக்கப் பாதைகள், தற்போது பெருமளவில் வெள்ளம் தேங்கி நிற்பதற்கான காரணிகளாக அமைந்து விட்டன என, பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து பாலாவி வரையான 17 கிலோ மீற்றர் வீதி புனரமைப்புப் பணிகள், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட போதிலும், கடந்த ஒன்றரை மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து சம்புவெளிப் பகுதி வரை அமைக்கப்பட்ட மதகுகளுக்கு அருகில் அமைக்கப்பட்ட பக்க பாதைகள் காரணமாக, கரியாலைநாகபடுவான் குளம், பல்லவராயன்கட்டு குளம் ஆகிய குளங்கள் நிரம்பி வான் பாய்கின்ற போது, பக்க பாதைகளால் மூடப்பட்டுள்ள 14 மதகுகள் ஊடாக வெள்ள நீர் வடிந்தோட முடியாமல் வீதியில் பெருமளவு வெள்ளம் தேங்கி, வெள்ள இடர் ஏற்படுவதற்கான அபாயம் காணப்படுகின்றது எனவும், அவர் கூறினார்.

பூநகரி பிரதேச சபைக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் நிதி உதவி வழங்கினால், மதகுகளுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள பக்க பாதைகளை பிரதேச சபையால் அகற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

### தொடர் மழை:

# குளங்களின் நீர்மட்டம் உயர்வு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில், அண்மைய நாள்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக, இரணைமடுக்குளம் உள்ளிட்ட குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

நேற்று (08) காலை கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, இரணைமடு குளத்தின் நீர் மட்டம், 22 அடி 9 அங்குலமாக உயர்வடைந்துள்ளது

இதேபோல், கல்மடு குளத்தின் நீர்மட்டம், 18 அடி 4 அங்குலமாகவும் பிரமந்தனாறு குளத்தின் நீர் மட்டம், 07 அடி 04 அங்குலமாகவும் கனகாம்பிகை குளத்தின் நீர் மட்டம், 10 அடி 9 அங்குலமாகவும் உயர்வடைந்துள்ளது.





### அல்லைப்பிட்டியில்

# காணி சுவீகரிப்பு முயற்சி தடுத்து நிறுத்தம்

■ என்.ராஜ்

மண்டைத்தீவு, அல்லைப்பிட்டி பகுதியில் நேற்று (08) முன்னெடுக்கப்படவிருந்த கடற்படையினருக்கான காணி சுவீகரிப்பு முயற்சி, பொதுமக்களின் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், காணி சுவீகரிப்புக்கு வருகை தந்த நில அளவைத் திணைக்கள அரச அலுவலர்களும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தீவகம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில், கடற்படையினரின் தேவைக்காக, நேற்று காலை, 3 இடங்களில் ஒரே நாளில் பொதுமக்களுக்கு சொந்தமான பின்வரும் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாக, நில அளவை திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

அல்லைப்பிட்டியில் 7 பரப்பு காணியும் மண்கும்பானில், 4 பரப்பு காணியும் புங்குடுதீவு - வல்லன் பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளும், கடற்படையினரின் தேவைகளுக்காக காணி சுவீகரிக்கப்பதற்காக நேற்றுக் காலை 9.30 மணியளவில், அவ்விடத்துக்கு வருகை தந்தனர்.

### வேலைவாய்ப்பில்

# மாற்றுத் திறனாளிகள் புறக்கணிப்பு

■ வடமலை ராஜ்குமார்

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலை வாய்ப்பில் மாற்றுத்திறனாளிகள் உள்வாங்கப்படாததை சுட்டிக்காட்டி, வெருகல், கதிரவன் மாற்றுத் திறனாளிகள் அமைப்பினர், திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பாண்டிகோரளவுக்கு பிரதேச செயலாளர் ஊடாக மகஜர் கையளித்தனர்.

குறித்த மகஜரை, கதிரவன் மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் தலைவர் ஜெ.கோவிந்தினி, செயலாளர் சி.குபேந்திரன் ஆகியோர் கையளித்தனர்.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பொதுத் துறையில் வெற்றிடங்களை நிரப்பும் போது,



மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சதவீத வேலை வாய்ப்பு வழங்குதல் (1998 பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 27/88 ஒகஸ்ட் 18 - 1988) என்ற அடிப்படையில், வெருகல் பிரதேசத்தில் வழங்கப்பட்ட இரண்டாம் கட்ட வேலை வாய்ப்பில் மாற்றுத்திறனாளிகள் எவரும் உள்வாங்கப்படவில்லை.

எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் 13 பேர் விண்ணப்பித்து நேர்முகத் தேர்வுக்கு தோற்றிய போதிலும் அதில் ஒருவர் கூட தொழில் வாய்ப்புக்காகத் தெரிவு செய்யப்படாததையிட்டு, நாம் மிகவும் கவலையடைகின்றோம்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் அதிகமான மாற்றுத் திறனாளிகள் வாழ்ந்து வருவதோடு, அவர்களில் 90 சதவீதமானவர்கள் நிரந்தர வருமானம் இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

எனவே, இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளை உள்வாங்கி, அவர்களது தொழில் உரிமையை உறுதி செய்யுமாறு கோருகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தேசியத்தையே

# காட்டிக்கொடுத்த அரசியல் தேவையா?

■ எம்.எம்.அஹமட் அனாம்

ஏதாவது சலுகைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஒட்டுமொத்த சமூகத்தையும் காட்டிக் கொடுத்து, ஜனாசாக்கள் எரிப்பதை அழகு பார்த்த அரசியல், இந்தச் சமூகத்துக்குத் தேவையா என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தவிசாளர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி கேள்வியெழுப்பினார்.

அ.இ.ம.கா தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் நாடளாவிய ரீதியில் தனது ஆதரவாளர்கள், கட்சித் தொண்டர்கள் ஆகியோரை சந்தித்து வருகின்றனார்.

இந்நிலையில், ஓட்டமாவடியில் அமீர் அலியின் இல்லத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது, அமீர் அலி மேற்கண்டவாறு



கேள்வியெழுப்பினார்.

அங்கு அவர் மேலும் கருத்துரைக்கையில், "அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகக் கொண்டு வந்து அழகு பார்த்தோம். தற்போது அவர்களே தலைமைக்கும், கட்சிக்கும் வில்லன்களாகச் செயற்படுகின்ற ஒரு காலகட்டத்தை நாங்கள் கண்டோம்.

எங்களிடத்தில் ஒரு கதை; அரசியல் தலைவர்களிடத்தில் காட்டிக் கொடுப்புச் செய்தார்கள். 350 மேற்பட்ட ஜனாசாக்களை எரித்து அழகு பார்த்து, எமது ஒட்டுமொத்த சமூகத்தையும் சீர்குலைத்து, சின்னா பின்னமாக்க வேண்டும் என்கின்ற நிலைவரத்தில் இருந்த பொழுதும் கூட எங்களுடைய உறுப்பினர்கள் அவர்களுக்கு கூஜா தூக்கிய நிகழ்வை முஸ்லிம் சமூகம் இலகுவில் மறந்துவிடக் கூடாது என்றார்.

இந்த மக்கள் சந்திப்பில் ரிஷாட் பதியுதீன் எம்.பி, முன்னாள் பிரதி அமைச்சர் எஸ்.கணேசமூர்த்தி, ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# புதிய நியமனம் வழங்கி வைப்பு



■ எஸ்.எம்.அறூஸ்

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரபின் முயற்சியால், அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர்களுக்கான நியமனம், நேற்று (08) வழங்கி வைக்கப்பட்டது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஒலுவில் அமைப்பாளர் ஏ.ஜே.எம்.அஸ்ஹர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரபின் இணைப்புச் செயலாளர் யூசுப் நியாஸ், அட்டாளைச்சேனை இணைப்பாளர் எஸ்.எம்.அறூஸ், அதிபர் அப்துல் ஜப்பார், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜஸ்வத் இலாஹி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அட்டாளைச்சேனை, ஒலுவில் கிராமங்களில் உள்ள 06 இளைஞர்களுக்கு முதற்கட்டமாக இந்நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



# விளைச்சல்

மட்டக்களப்பு, கடுக்காமுனை, வில்லுக்குளத்து நீரைப் பயன்படுத்தி, இடைப் போகத்தை மேற்கொள்வதற்கு அப்பகுதி விவசாயிகளுக்கான அனுமதியை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் பெற்றுக்கொடுத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இம்முறை 95 ஏக்கர் செய்கை பண்ணப்பட்டமையால் அப்பகுதியை சேர்ந்த 63 விவசாயக் குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன.

குறித்த பகுதியில் செய்கை பண்ணப்பட்ட வயல்களை அறுவடை செய்யும் விழாவுக்கு இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, அறுவடையையும் ஆரம்பித்து வைத்துள்ளார்.

(படம்: எம். எஸ். எம் நூர்தீன்)

### டெங்கு அபாயம்:

# 25 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த 25 வீட்டு உரிமையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எஸ். அகிலன் தெரிவித்தார்.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி, விசேட வேலைத்திட்டம், நேற்று (08) முதல் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

# ரயில் மோதி குடும்பஸ்தர் பலி

■ ஹஸ்பர் ஏ ஹலீம்



திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பகுதியில் ரயில் மோதியதில் இளம் குடும்பஸ்தர், ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

முள்ளிப்பொத்தானையை சேர்ந்த 21 வயதுடைய இளம் குடும்பஸ்தரான ஹமீட் முபீட் என்பவரே, நேற்று முன்தினம் (07) மாலை கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ரயில் மோதி பலியாகியுள்ளார்.

காதில் 'ஹெட்செட்' அணிந்த நிலையில், அலைபேசியில் உரையாடியபடி ரயில் தண்டவாளத்தில் நின்றிருந்த போது, ரயில் மோதியதில் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குடும்பஸ்தரின் சடலம், கந்தளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பதுளையில் 150 குடும்பங்களுக்கு

# பாதுகாப்பான இடங்களில் வீடுகள்

## அரவிந்தகுமார் எம்.பி தெரிவிப்பு: நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்கிறார்

எம். செல்வராஜா

பதுளை- வேவஸ்சை, கிளன் அல்பின், தெளிவத்தை போன்ற பெருந்தோட்டங்களில் மண்சரிவு அபாயங்களை எதிர்நோக்கியுள்ள பகுதிகளில், வாழ்ந்து வரும் 150 குடும்பத்தினருக்கு, பாதுகாப்பான இடங்களில் தனி வீடுகளை நிர்மாணிக்க, நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

மேற்படி, மூன்று பெருந்தோட்டங்களைப் பொறுப்பேற்றிருக்கும், பலாங்கொடை பிளான்டேசன் நிறுவன நிறைவேற்று அதிகாரி, குறிப்பிட்ட தோட்டமுகாமையாளர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் அனுப்பியுள்ள கடிதங்களிலேயே, மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

இக்கடிதங்களின் பிரதிகள் பதுளை மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அக்கடிதங்களில் வேஸ்சை பெருந்தோட்டத்தில் மண்சரிவு அபாயப் பிரதேசத்தில் 63 குடும்பங்கள்



வாழ்ந்து வந்த போதிலும், 25 குடும்பங்களுக்கு மட்டுமே, பாதுகாப்பான இடங்களில் காணித்துண்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் 38 குடும்பங்களுக்கு, காணித்துண்டுகள் ஒதுக்கப்படவில்லை. ஆகவே, இவர்களுக்கான காணித்துண்டுகள் விரைவில் ஒதுக்கப்படல்வேண்டும்.

கிளன் அல்பின் பெருந்தோட்டத்தில் மண்சரிவு அபாயப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 38 குடும்பத்தினருக்கான பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால், இவர்களுக்கான காணித்துண்டுகள் பலகல தோட்டப்பிரிவின் 26ஆம் இலக்கப் பகுதியில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இக் காணித்துண்டுகள் வீடுகள் நிர்மாணிப்பதற்கு உகந்ததல்லவென்று, தேசிய கட்டட ஆய்வக அமைப்பு தெரிவித்துள்ளது. ஆகையால், வீடுகள் நிர்மாணிப்பதற்கு உகந்தவகையில் காணித்துண்டுகளை, விரைவில் ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்படி பெருந்தோட்டங்களில் மண்சரிவு அபாயங்கள் எதிர்நோக்கப்பட்ட பகுதிகளில், வாழ்ந்து வரும் 150 குடுபத்தினருக்கு பாதுகாப்பான இடங்களில், தனி வீடுகளை நிர்மாணிக்க, இடர் முகாமைத்துவ அமைச்சு, தேவையான நிதியையும் ஒதுக்கியுள்ளது. ஆகவே, குறிப்பிட்ட பெருந்தோட்டங்களில் மண் சரிவுக்கு உட்படாத வகையிலான காணித் துண்டுகளை ஒதுக்கித்தருமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# “இந்த அரசாங்கத்தை வீழ்த்துவது நிச்சயம்”

## இராதா எம்.பி தெரிவிப்பு

எஸ்.கணேசன்

“இந்த அரசாங்கத்தை வீழ்த்துவது நிச்சயம். அடுத்த தேர்தலில் சிறப்பானதோர் ஆட்சியயைக் கொண்டு வருவதற்கு நாட்டு மக்கள் அணிதிரள வேண்டும்” என, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பட்ஜட் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில் நேற்று முன்தினம் (07) நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் தெரிவித்த அவர், “மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பளம் இன்னும் முறையாக, முழுமையாக கிடைக்கவில்லை. சம்பளப் பிரச்சினை ஒருபுறம்; மறுபுறத்தில் விலையேற்றம் என்ற தாங்க முடியாத சுமை. சமையல் எரிவாயு, பால்மா, இதர அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. இதனால் வாழ்க்கை சுமையும் அதிகரித்துள்ளது.

ஆசிரியர்கள், மின்சார சபை ஊழியர்கள், துறைமுக ஊழியர்கள் என அனைவரும் இன்று வீதிக்கு இறங்கிவிட்டனர். யார் வேண்டுமானாலும் எப்படியும் பொருட்களை விற்கலாம் என்ற நிலைமை உருவாகியுள்ளது. எது எப்படி இருந்தாலும் இந்த ஆட்சி வீழ்வது உறுதி. நல்லதோர் அரசை உருவாக்க மக்கள் அடுத்த தேர்தலுக்கு தயாராக வேண்டும்” என்றார்.

மொனராகலையில் தொற்றாளர்கள்

# எண்ணிக்கை மீண்டும் அதிகரிப்பு

சுமணசிறி குணதிலக

மொனராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் (07) 63 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய இதுவரை மொனராகலையில் 13,065 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 209 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனினும், கடந்த மாதம் இறுதியில் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் பாரிய குறைவு காணப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் அதிகரித்துள்ளதென, மொனராகலை பிரதேச சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



## கிராமத்திலிருந்து ஆரம்பிப்போம்...

மக்கள் விடுதலை முன்னணி ஒருங்கமைப்பு செய்துள்ள ‘கிராமத்திலிருந்து ஆரம்பிப்போம்’ வேலைத்திட்டத்தின் கீழ், பொதுமக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கை நேற்று (08) கேகாலை நகரில் முன்னெடுக்கப்பட்டது. இதில் அக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க, கே.டி. லால்காந்த உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (என். ஆராச்சி)

ஒஸ்போன் தோட்டத்தில் அகற்றப்படாத கழிவுகளால்

# நோய் பரவும் அபாயம்

எம்.கிருஸ்ணா

மஸ்கெலியா பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட, ஒஸ்போன் தோட்டத்தில், நீண்ட காலமாக கழிவுகள் அகற்றப்படாமையால், அங்கு பாரிய சுற்றாடல் அச்சுறுத்தலும் நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

ஒஸ்போன் தோட்ட நிர்வாகத்தினரால், நோட்டன்- ஹட்டன் பிரதான வீதியோரம் அமைக்கப்பட்டுள்ள இரண்டு கழிவு சேகரிப்பு தொட்டிகளில் கொட்டப்படும் கழிவுகள் நீண்ட காலமாக அகற்றப்படவில்லை.

இதனால் கழிவுகள் நிரம்பி, நாய்கள் இழுத்துச்சென்று வீதிகளில் போடுவதால், பிரதான வீதியோராம் துர்நாற்றம் வீசுவதுடன் தொற்று நோய்கள் ஏற்படும் என அதற்கு அண்மித்துள்ள குடியிருப்பாளர்களும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே, கழிவுகளை அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஒஸ்போன் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.



நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி

# திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்

டி.சந்ரு

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் ஊடாக 2021 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில், நுவரெலியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது மஸ்கெலியா, அக்கரப்பத்தனை, நோர்வூட் கொட்டகலை, லிந்துலை தலவாக்கலை, ஹட்டன் ஆகிய நகர சபை, பிரதேச சபைகளில் அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேலும் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் மூலம் ஹட்டன், நுவரெலியா ஆகிய பிராந்திய காரியாலயங்களில் முன்னெடுக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில்



பெருந்தோட்டத்துறையில் எதிர்காலத்தில் அமையவிருக்கும் வீடமைப்புத் திட்டங்களுக்கு இடத்தினை தெரிவு செய்யும்போது, முறையான இடத்தினை தெரிவு செய்தல், அத்தோடு தற்காலிக கூடாரங்களில் தங்கி வசிக்கும் பொதுமக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என பிரதேச சபை தலைவர்களிடமும் அதிகாரிகளிடமும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கேட்டுக்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் அமைச்சின் செயலாளர் டி.பி.ஜி குமாரசிரி, அமைச்சின் அதிகாரிகள், பிரதேச சபை தலைவர்கள், பிரதேச சபையின் செயலாளர் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

ஆசிரியர்களின் இன்றைய போராட்டத்துக்கு

# முழு ஆதரவு

## என்கிறார் வடிவேல் சுரேஸ் எம்.பி

அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க ஒன்றியம் நடத்தும் போராட்டத்துக்கு, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்கும் என, அச் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்;

அதிபர், ஆசிரியர் சம்பளப் பிரச்சினை முற்றுப்பெறாத தொடர்கதையாகத் தொடர்ந்து கொண்டே செல்கின்றது. அதற்கு முழுமையான ஒரு தீர்வு பெற்றுத்தரப்படுதல் வேண்டும். மேலும், வானத்தைத் தொடும் பொருட்களின் விலை ஏற்றத்தால், ஒட்டுமொத்த நாட்டு மக்களும் பல பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெருந்தோட்ட மலையக மக்களும் இதற்கு விதி விலக்கல்ல. பெருந்தோட்ட நிர்வாகங்களால் ஏற்படும் தொழில் பிணக்குகள் மட்டுமல்லாமல் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவாலும் இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு முகம்

> “ அதிபர், ஆசிரியர் சம்பளப் பிரச்சினை முற்றுப்பெறாத தொடர்கதையாகத் தொடர்ந்து கொண்டே செல்கின்றது. அதற்கு முழுமையான ஒரு தீர்வு பெற்றுத்தரப்படுதல் வேண்டும்

கொடுத்து வருகின்றார்கள்.

இவை அனைத்தையும் முன்னிறுத்தி இன்று (9) நடைபெற இருக்கின்ற எதிர்ப்பு போராட்டத்துக்கு, மலையக மக்கள் சார்பாக நானும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் முழு ஆதரவையும் தருகின்றோம் எனத் தெரிவித்தார்.

மழையால் மலையகத்தில்

# மண்சரிவுகளும் அதிகரிக்கின்றன

டிசந்ரு, ரஞ்சித் ராஜபக்‌ஷ

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையால் மலையகத்தில் பல இடங்களில் அங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டு வருகின்றன.

இதற்கமைய,நேற்று (8) காலை 7 மணியளவில், நுவரெலியா- கண்டி செல்லும் வழியில் ரம்பொட நகருக்கு அருகாமையில், மண்மேடு சரிந்து விழுந்ததில், குறித்த வீதியுடனான போக்குவரத்து சில மணித்தியாலயங்கள் தடைப்பட்டிருந்தன.

பின்னர், அப்பிரதேச மக்களால் சரிந்து விழுந்த மரங்களும் மண்ணும் அகற்றப்பட்டதன் பின்னர் போக்குவரத்துகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதேவேளை லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊவாகலை- எல்ஜின் தோட்டத்துக்குச் செல்லும் வீதியின் ஒரு பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால், மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் குறித்த தோட்டத்தில் பறிக்கப்படும் கொழுந்துகளை வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தோட்ட நிர்வாகத்தால் நுவரெலியா மாவட்ட செயலாளருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, நேற்று (8) நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், அவர்களால் குறித்த வீதியை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய குறித்த மதிப்பீட்டு அறிக்கையானது, தோட்ட வசதிகள், சமூக அபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்பப்பட்டு, தேவையான நிதி கிடைத்தவுடன் ஊவாகெல வீதியின் புனரமைப்பு பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்துள்ளார்.

மக்களுக்காக செய்யும் வேலைகளை

# இ.தொ.கா பட்டியலிடுவதில்லை

## ராமேஸ்வரன் எம்.பி சுட்டிக்காட்டினார்

கே.சுந்தரலிங்கம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேர்தல் காலப்பகுதியில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறது எனத் தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளருமான எம். ராமேஸ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மக்களுக்காக செய்யும் வேலைகளை ஒருபோதும் பட்டியல் இடுவதில்லை என்றார்.

நேற்றுமுன்தினம் (07) கொட்டகலை பிரதான பாதையை, இணைக்கும் கிரிலஸ்பாம்- கே.ஓ.டிவிசன் பிரதான பாதையைப் புனரமைத்து,



மக்கள் பாவனைக்கு வழங்கிய நிகழ்வில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்:

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து சுமார் ஒரு வருட காலமாகின்றது. மலையகத்தில் எந்த வேலைத்திட்டங்களும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை எனப் பலர் விமர்சித்து வருகின்றனர். ஆனால் கடந்த ஒரு வருட காலப்பகுதியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

பல காபட் பாதைகள் பூர்த்தி செய்யப்பட்டு இன்றும் கூட மக்கள் பாவனைக்காக ராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானால் கையளிக்கப்பட்டுள்ளன. இன்றும் கூட பல காபட் பாதைகள் கையளிக்கப்படவுள்ளன.

நாங்கள் செய்யும் சேவைகளை மக்களை சென்றடைய வேண்டும் என்பது தான் எமது ஒரே நோக்கம் என்றார்.

# டெங்கும் வருவதால் சிரத்தையுடன் சிரமதானம் செய்வோம்

அடிக்கொரு தடவை ஞாபகமூட்டாவிடின், ஒன்றிலிருந்து மீண்டெழுவது என்பது, சிலருக்கு கடினமானதாகவே இருக்கும். கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பிலான செய்திகள், ஓரளவுக்கு காதுகளுக்கு கேட்பது குறைவாக இருந்தாலும், டெங்கு தலைதூக்கத் தொடங்கிவிட்டது எனலாம். டெங்கு நுளம்பின் இனப்பெருக்கத்துக்கு ஒத்துழைப்பதைப் போல, மழையும் வெளுத்து வாங்குகின்றது.

கொரோனா வைரஸ் தொற்றின் அச்சம் காரணமாக, வீடுகளுக்குள்ளேயே முடங்கிக்கிடந்தவர்கள், டெங்கு நுளம்பை துரத்திக்கொண்டு ஓடவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கடந்த சில வாரங்களாகவே நீடித்த மழையால், நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிகின்றன. அது மட்டுமன்றி, வீட்டுக்கூரைகள், வீட்டுத்தோட்டங்கள் மற்றும் தமது சுற்றாடலில் வீசப்பட்டுக் கிடக்கும் ஒவ்வொரு பொருட்களிலும் மழைநீர் தேங்கத் தொடங்கிவிட்டது.

வீடுகளுக்குள்ளே முடங்கிக்கிடந்தவர்கள், வீடுகளிலிருந்து வெளியேறி ஒவ்வொரு நாளும் சிரமதானப்பணிகளை முன்னெடுக்கவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுவிட்டனர். இனி, மழைநீர் தேங்கியிருக்கக்கூடிய வெற்றுப்பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும். மழைநீர் தேங்காமல் இருப்பதற்கான மாற்று வழிமுறைகளைக் கையாளவேண்டும். வீட்டு சூழலை சுத்தமாக வைத்திருக்கவே வேண்டும்.

சுற்றாடலை மனிதன் ஆக்கிரமிக்கும் பொழுதுதான், மனிதனுக்கு தீங்கிழைக்கக்கூடிய பல்வேறான சம்பவங்கள் அரங்கேறுகின்றன. உறையுள் தேவைக்காக மலைப்பாங்கான இடங்களை செங்குத்தாக சரித்து அல்லது குடைந்து வீடுகளைக் கட்டும்போது, மண்சரிவு ஏற்பட்டுவிடுகின்றது. இதேபோலதான், இயற்கையின் கோரத்தாண்டவத்துக்குள் பல சந்தர்ப்பங்களில் மனிதன், தானாகவே சிக்கிக்கொள்கின்றான்.

தொற்றுகளும் பரவத்தொடங்குகின்றன. இவ்வாண்டு இதுவரையிலான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 15,409 ஆகும். அதில், நவம்பர் மாதத்தில் கடந்த நான்கு நாள்களில் மட்டும் 504 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். ஆகையால், டெங்கு நுளம்பால் விடுக்கப்பட்டிருக்கும் சிவப்பு எச்சரிக்கை தொடர்பில், விழிப்புடன் இருக்குமாறு சுகாதாரத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

டெங்கு, பெருவாரியாக பரவும் தொற்று நோய் என்பதால், கிடைக்கும் நேரங்களில் எல்லாம், மழைநீர், ஏனைய கழிவு நீர், தேங்கியிருக்காத வகையில், சுற்றாடலை சுத்தமாக வைத்துக்கொள்ளும் வகையில், அவ்வப்போது சிரமதானப்பணிகளில் ஈடுபடுவதே சிறந்தது.

ஒவ்வொருவருடைய வீடு மற்றும் வீட்டைச் சுற்றிய பகுதிகளை சுத்தப்படுத்திக்கொள்வது மட்டுமன்றி, அக்கம் பக்கம் இருப்பவர்களின் வீட்டு வளாகத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்வதற்குத் தூண்டவேண்டும். அதனூடாகவே, டெங்கு நுளம்பு இனப்பெருக்கம் செய்வதைத் தடுக்கமுடியும். ஒரு வீட்டு வளாகத்தை மட்டுமே சுத்தம் செய்வதன் ஊடாக, டெங்கு நுளம்பு பரவுவதை ஒருபோதும் தடுத்துவிடமுடியாது.

டெங்கு நுளம்பு பரவுவதை தடுக்கப் போய், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகிவிடக்கூடாது என்பதுடன், கொரோனா தொற்றிக்கொள்ளாது, டெங்கொழிப்பை முன்னெடுத்து, டெங்கிலிருந்தும் தற்பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை உடனடியாகக் கையாள்வதே காலத்தின் தேவையாக உள்ளது.


## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உங்கள் பகைவரிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என, உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாக சம்பவித்துவிடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டுவிடுகின்றது. சிலசமயங்களில், உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம், யாவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக! அதுவே, உங்கள் இதயத்தில் புதுஒளியைப் பாய்ச்சும்.

தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால், பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்தியர்கள் தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் 'ஸ்கானிங்' சிகிச்சை பிரிவில், போதிய வைத்தியர்கள் இன்மையால், சிகிச்சை பெற்றுக்கொள்வதில் பல இடர்பாடுகள் காணப்படுவதாக நோயாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையின் 'ஸ்கானிங்' சிகிச்சைப் பிரிவில் போதிய வைத்தியர்கள் இன்மையால், குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்கு மாத்திரமே 'ஸ்கானிங்' சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.

குறிப்பாக, பிற்பகல் நான்கு மணிக்குப் பின்னர், சிகிச்சைகள் இடம்பெறுவதில்லை. அதேபோல், ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிகிச்சை நடைபெறுவதில்லை. இதனால், விபத்துகளில் காயமடைந்தவர்கள், இதர நோய்வாய்ப்பட்டு வருபவர்கள் போன்றோர், வெளிமாவட்ட வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படும் நிலை காணப்படுகின்றது.

அத்துடன், 'ஸ்கேனிங்' சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்கள், வைத்தியசாலை விடுதிகளில், சில நாள்கள் தங்கி நிற்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இது, இன்றைய கொவிட்-19 பெருந்தொற்று பேரிடர் காலப்பகுதியில், தேவையில்லாமல் வைத்தியசாலையில் தங்குவதால், தொற்றுக்குள்ளாகும் வாய்ப்புகள் அதிகம் என்பது, பொதுவாக சுகாதார அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில், இதுவரைகாலமும் கடமையிலிருந்த சிரேஷ்ட வைத்தியர் ஒருவருக்கு இடமாற்றம் வழங்கியபோதிலும் அவருக்குப் பதிலாக, மற்றுமொருவரை நியமிக்காததால் இந்த நிலைமை ஏற்பட்டு உள்ளதாக அறிய முடிகின்றது.

எனவே, வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையில் ஏ9 சாலையில், இருக்கும் ஒரேயொரு தரமான வைத்தியசாலையில் நிலவும் இத்தகைய குறைபாட்டை உடனடியாக நிவர்த்தி செய்து, நோயாளர்களை அசௌகரியப்படுத்தாத சிறப்பான சேவையை பொதுமக்கள் துரிதமாக விரும்புகின்றார்கள்.

-யது பாஸ்கரன்

எல்லா முஸ்லிம் தலைமைகளுடனும்

# தமிழ்த் தரப்பு உரையாடுவது அவசியம்

மொஹமட் பாதுஷா

தமிழ்க் கட்சிகளும் அரசியல் அணிகளும் முஸ்லிம் கட்சி ஒன்றும் இணைந்து, சில தினங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் நடத்திய சந்திப்பு, சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் அரங்கில் சில அதிர்வுகளை ஏற்படுத்தி இருக்கின்றது.

அடிப்படையிலேயே இதுவொரு நல்ல நகர்வாகப் பார்க்கப்படுகின்றது. இரண்டு சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் அணிகளும் ஒருமேசையில் அமர்வது, நல்லதொரு முன்மாதிரி என்பதை மறுக்க முடியாது. ஆனால், தமிழ்த் தரப்பும் முஸ்லிம்களும் இதை இரு வெவ்வேறு கோணங்களில் நோக்குகின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசியல் கட்சிகளிடையே அண்மைக்காலமாக கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுள்ளன. ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் இடம்பெற்ற போது, இந்த முரண்பாடுகள் துருத்திக் கொண்டு வெளியில் வந்தன.

அந்தவகையில், யாழ். ஒன்றுகூடல் என்பது, மீண்டும் தமிழ்க் கட்சிகள் அமர்ந்து பேசுவதற்கான களத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. இருப்பினும், இந்தக் கூட்டத்தில் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் பங்குபற்றவில்லை. அதுவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவக் கட்சியான தமிழரசுக் கட்சி, இதில் பங்கேற்கவில்லை என்பது, மிகப் பெரும் வெற்றிடமாகத் தெரிகின்றது.

இதேவேளை, முஸ்லிம் அரசியல் அணிகளில் இருந்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரமே, யாழ். சந்திப்பில் கலந்து கொண்டிருக்கின்றது. இது, முஸ்லிம் சமூகத்துக்குள் இருவேறு கோணங்களில் நோக்கப்படுகின்றது.

முதலாவது, தமிழ்த் தரப்பினருடன் முஸ்லிம் கட்சியொன்று உரையாடலில் ஈடுபடுவது, நல்லதோர் ஆரம்பமாக அமையும் என்று, சொற்ப அளவான முஸ்லிம் மக்கள் கருதுகின்றனர்.

இரண்டாவது, முஸ்லிம் காங்கிரஸ் மட்டும், முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என, ஏனைய முஸ்லிம்கள் கருதுகின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் பிரதான முஸ்லிம் கட்சிதான்! ஆனால், முஸ்லிம் அரசியல் தரப்பு என்பது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற கட்சிகளை மட்டுமன்றி, இன்னும் பல அணிகளையும் அதேபோன்று பெரும்பான்மைக் கட்சிகளில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாகவே அமையும். குறைந்தபட்சம், பிரதான முஸ்லிம் கட்சிகளாவது இவ்வாறான கலந்துரையாடல்களில் உள்வாங்கப்பட வேண்டும்.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல் சற்று வித்தியாசமானது. கடந்த 10 வருட அரசியல், முஸ்லிம்களைப் பகடைக் காய்களாக்கியே, தேசிய அரசியல் நகர்வுகளை மேற்கொண்டுள்ளமை கண்கூடு. எனவே, முஸ்லிம்கள் மிகக் கவனமாக, அரசியல் நகர்வுகளைச் செய்ய வேண்டியிருக்கின்றது.

சிறுபான்மைச் சமூகங்கள் என்ற வகையிலும் எல்லா அடிப்படைகளிலும் பிணைக்கப்பட்ட இனக் குழுமங்கள் என்ற வகையிலும், தமிழ் - முஸ்லிம் உறவு தவிர்க்க இயலாதது. முஸ்லிம்கள் உறவாட வேண்டிய சமூகங்களின் வரிசையில், தமிழர்களுக்குத்தான் எப்போதும் முன்னுரிமை இருக்க வேண்டும்.

அத்துடன், தமிழர்களோடு கூட்டிணைந்து செயற்படுவது, முஸ்லிம்களின் அரசியல் பலத்தை அதிகரிக்க வழிகோலும் என்பதையும் மறுக்கவியலாது.

ஆனால், அதற்காக தமிழர்களுடன் அரசியல் ரீதியாக இறுக்கமாவதன் ஊடாக, பெரும்பான்மைச் சமூகம் சார்ந்த அரசியல் தரப்பில் இருந்து தூரமாவது, இன்றைய நிலைவரப்படி முஸ்லிம்களுக்கு பாதுகாப்பானதாக இருக்க மாட்டாது. இதற்கான காரணங்களை விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை.

அடுத்த விடயம், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், சாணக்கியமான அரசியல் தலைவர் என்றாலும், முஸ்லிம்களின் குறிப்பாக தமிழரின் இனப்பிரச்சினை விவகாரத்தோடு பெரிதும் தொடர்புபட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள முஸ்லிம்களின் மனக்கிடக்கைகள், நிலைப்பாடுகள் போன்றவற்றைத் தெளிவாக எடுத்துச் சொல்லக்கூடியவரா என்பதில் ஐயமுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், எப்போதும் தமிழர் அரசியலோடு தொடர்பில் இருப்பவர். இதற்கு முன்னரும், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் நடந்த சந்திப்புகளில் அவர் பங்குபற்றி இருக்கின்றார்.

ஆனால், தமிழர்களின் அபிலாஷைகளைத் தமிழ் அரசியல்வாதிகள் முன்வைத்த அளவுக்கு, முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஹக்கீம் முன்னிறுத்தியதாக நினைவில்லை. இருப்பினும், தமிழ் அரசியல்வாதிகள் அண்மைக் காலமாக, முஸ்லிம்களுக்காக குரல்கொடுத்து வருகின்றார் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இதேவேளை, கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழ் மக்களின் பிரச்சினைகள் முன்னிலைப்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது. இதுதான் யதார்த்தமும் ஆகும். இதைத்தவிர, பொதுவாக சிறுபான்மையினரின் நலன்களை முன்னிறுத்திச் சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

ஆனால், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள், இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை; அல்லது, அதற்காக அழைக்கப்படவில்லை என்பது பெரும் குறைபாடாகும். அதனால், இவ்விரு மாகாணங்களிலும் உள்ள முஸ்லிம்களின் நிலைப்பாடு, சரியாக முன்வைக்கப்பட்டதா என்பதில் நிறையவே சந்தேகம் இருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று வரும்போது, இணைந்த வடகிழக்கை மையமாகக் கொண்ட ஒரு தீர்வுப் பொதியையே, தமிழ்த் தேசியம் வேண்டி நிற்கின்றது. இதை வெவ்வேறு பெயர்களில் அவர்கள் இன்றுவரை கோரி வருகின்றனர். குறைந்தது, ஒவ்வொரு நாளும் இதுபற்றிய ஓர் அறிக்கையாவது வெளியாகிக் கொண்டே இருக்கின்றது.

தமிழர்கள் நீண்டகாலமாகப் போராடி வருகின்ற ஒரு சமூகம் என்ற அடிப்படையில், அவர்கள், தமது அபிலாஷைகளை நிறைவேற்ற முனைவது, எந்த வகையிலும் தவறில்லை.

ஆனால், இந்த விடயத்தில் முஸ்லிம்களோடு கலந்துபேச முற்படுகின்ற போது, முஸ்லிம்களின் கருத்துகளும் சரியாக உள்வாங்கப்பட வேண்டும். அப்படியென்றால், ஒரேயொரு தலைவரை மட்டும் அழைத்து, முஸ்லிம்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள முடியாது.

மறுபுறத்தில், ஏனைய முஸ்லிம் தலைமைகள், அணிகள் இவ்வாறான சந்திப்புகளுக்கு வருவார்களா என்பது இன்னுமொரு கேள்வியாக உள்ளது. எதுஎவ்வாறாயினும், தமிழ் மக்களது அபிலாஷைகளுக்கு முஸ்லிம்கள் குறுக்காக நிற்க மாட்டார்கள்; நிற்கவும் முடியாது. ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படக் கூடாது என்பது, இவ்விரு மாகாணங்களிலும் வாழ்கின்ற முஸ்லிம்களின் நிலைப்பாடாகும்.

இந்த நிலைப்பாட்டை, எந்த முஸ்லிம் தலைவராலும் மாற்றியமைக்க முடியாது என்பதை தமிழ்த் தரப்பு விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஏன், வடக்கும் கிழக்கும் இணைக்கப்படக் கூடாது என்பதற்கு, முஸ்லிம்கள் தரப்பில் ஏகப்பட்ட நியாயங்களும் காரணங்களும் உள்ளன. அதிலுள்ள நியாயங்களை யாரும் மறுதலிக்க முடியாது.

சுருங்கக் கூறின், இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்கள் பட்ட அனுபவங்கள் மிகக் கசப்பானவை. தமிழர் விடயத்தில், ஆங்காங்கே முஸ்லிம்கள் தரப்பிலும் சில தவறுகள் நிகழ்ந்தன என்பதை இங்கு பொறுப்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆயினும், அதைவிடப் பெரிய வலிகளை முஸ்லிம்கள் இக்காலத்தில் அனுபவித்தார்கள். வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றம், பள்ளிவாசல் படுகொலைகள், கடத்தல், கப்பம் பறிப்புகள் என ஏராளம் கதைகள் உள்ளன. தமிழர் விடுதலைப் போராட்டத்தில் கறைபடியச் செய்த சம்பவங்களாகவும் இதனைக் கொள்ளலாம்.

ஆதலால், தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கும் கிழக்கும் பிரிய வேண்டும் என்ற மனநிலை முஸ்லிம்களுக்கு எப்போதுமே இருந்தது. அவை பிரிந்த பிறகு, அதன் பலாபலன்களை முஸ்லிம் சமூகம் ஓரளவுக்கு அனுபவித்தது. கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களும், அபிவிருத்தி சார்ந்த பல அனுகூலங்களைப் பெற்றிருக்கின்றார்கள் என்றே கூற வேண்டும்.

இதையெல்லாம் தாண்டி, மீண்டும் வடக்கு, கிழக்கை இணைக்க வேண்டிய தேவை முஸ்லிம்களுக்கு இல்லை. அதில் தமிழர்களுக்கு இருப்பது போன்ற எந்த அனுகூலமும் முஸ்லிம் சமூகத்துக்கு இல்லை.


எனவே, இதுபோன்ற விடயங்களை முஸ்லிம்கள் தரப்பில் பேசுகின்றவர்கள் நேர்மையான முறையில், தமிழர்களின் மனங்கள் புண்படாத விதத்தில் தெளிவுபடுத்த வேண்டும். ஆனால், யாழ். கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அதைச் செய்ததாகத் தெரியவில்லை.

அப்படி அவர் தெளிவுறச் சொல்லியிருந்தால், தமிழ் அரசியல்வாதி ஒருவர், "அப்படியென்றால் ஹக்கீம் வடக்கு, கிழக்கு இணைப்புக்கு உடன்படுகின்றாரா" என்ற கேள்வியொன்றை, அதன் பிறகு கேட்டிருக்க மாட்டார்.

யதார்த்தமாகச் சிந்தித்தால், தமிழர்களோடும் சிங்கள சமூகத்தோடும் இறுக்கமான சமூக உறவையும் அளவான அரசியல் இணக்கப்பாட்டையும் கொண்டிருப்பதே முஸ்லிம்களுக்கு நல்லது.

இன்று, சிங்களத் தேசியம் முஸ்லிம்களை நெருக்குகின்றது என்பதற்காக, தமிழர்களுடன் உறவாடுவதோ, பெருந்தேசியத்தோடு இணைந்து கொண்டு தமிழர்களை விமர்சிப்பதோ காத்திரமான அரசியலும் இல்லை; நாகரிகமான போக்கும் இல்லை.

அதுபோல, ரவூப் ஹக்கீமைப் போல, ஏனைய முஸ்லிம் தலைமைகளும் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை ஏனைய சமூகங்களுடன் பேசுவதற்கு முன்வர வேண்டும். அங்கு முன்வைக்கப்படும் கருத்துகள், அந்தத் தலைமைகளின் கருத்துகளாக இருக்காமல், சமூகத்தின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்துபவர்களாக மட்டும் அவர்கள் இருக்கவும் வேண்டும்.




# நான்கு மொழிகளில் அனுஷ்கா

தமிழ், தெலுங்கு திரைப்பட உலகில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் அனுஷ்கா நடிப்பில் கடைசியாக வெளிவந்த 'நிசப்தம்' திரைப்படம் தோல்வியடைந்தது.

இதனால் இரண்டு வருடங்களுக்கு மேலாக அவர் திரைப்படங்களில் நடிக்கவில்லை. இதனிடையே நடிகை அனுஷ்கா, திருமணத்துக்கு தயாராகி வருவதாகவும் செய்தி வெளியானது.

இந்த நிலையில், அனுஷ்கா நடிக்க உள்ள 48ஆவது திரைப்படம் பற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகி உள்ளது. தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம் ஆகிய 4 மொழிகளில் தயாராக உள்ள இந்தத் திரைப்படத்தை பி.மகேஷ்பாபு எழுதி இயக்குகிறார்.

யூவி கிரியேஷன்ஸ் பட நிறுவனம் தயாரிக்க உள்ளது. படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளதுடன், இதர நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு நடக்கிறது. திரைப்படத்துக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை.



# களமிறங்கும் கமல்

கமல் – ஷங்கர் கூட்டணியில் உருவாகி வரும் 'இந்தியன் 2' திரைப்படத்தை 'லைகா' நிறுவனம் தயாரிக்கிறது. படப்பிடிப்பு தளத்தில் கிரேன் விபத்து ஏற்பட்ட போது, நிறுத்தப்பட்ட படப்பிடிப்பு அதன்பின் தொடங்கப்படவில்லை.

மேலும், தயாரிப்பு தரப்புடன் ஏற்பட்ட மோதல் காரணமாக, 'இந்தியன் 2' திரைப்படத்தை கிடப்பில் போட்ட இயக்குநர் ஷங்கர், ராம்சரணை வைத்து தெலுங்கு திரைப்படம் ஒன்றை இயக்க தயாரானார்.

இந்நிலையில், இந்தியன் 2 திரைப்படத்தின் படப்பிடிப்பு, மீண்டும் தொடங்கப்படுவது எப்போது என்பது குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, வருகிற டிசெம்பர் மாதம் படப்பிடிப்பு தொடங்கும் என்றும், இதற்காக நடிகர் கமல்ஹாசன் 100 நாள்கள் ஒதுக்கி உள்ளதாகவும் கூறப்படுகிறது.



# கௌதம் மேனன் புகார்

இயக்குநர் கௌதம் மேனன் தற்போது நடிப்பிலும் கவனம் செலுத்தி வருகிறார். அந்த வகையில், இவர் 'அன்பு செல்வன்' என்ற திரைப்படத்தில் பொலிஸ் அதிகாரியாக நடித்துள்ளதாக அறிவிப்பு வெளியானது.

அத்துடன், வினோத் குமார் இயக்கி உள்ள இந்தத் திரைப்படத்தில் கௌதம் மேனன் துப்பாக்கியுடன் இருக்கும் போஸ்டரையும் வெளியிட்டனர். இந்த நிலையில், இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த கௌதம் மேனன் 'அன்பு செல்வன்' திரைப்படத்தில் தான் நடிக்கவில்லை என்று மறுத்தார்.

இதையடுத்து 'அன்பு செல்வன்' படக்குழுவினர் கௌதம் மேனன் நடித்த காட்சிகளை வீடியோ தொகுப்பாக வெளியிட்டு திரைப்படத்தில் அவர் நடித்து இருப்பது உண்மை என்றும், திரைப்படத்தின் பெயர் 'அன்பு செல்வன்' என்று மாற்றப்பட்டதே குழப்பத்துக்கு காரணம் என்றும் தெளிவுப்படுத்தினர்.

இதையடுத்து 'அன்பு செல்வன்' திரைப்படக்குழுவினர் மீது தயாரிப்பாளர் சங்கத்தில் கௌதம் மேனன் புகார் மனு அளித்துள்ளார். அதில், "ஜெய் கணேஷ் இயக்கத்தில் 'வினா' என்ற திரைப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டு, 2018ஆம் ஆண்டு சில நாள்கள் படப்பிடிப்பிலும் கலந்துகொண்டேன். அதற்குப் பிறகு பணிகள் நடக்கவில்லை.

தற்போது வினோத் குமார் இயக்கத்தில் திரைப்படத்தை மீண்டும் தொடங்கலாம் என்றனர். நான் ஜெய்கணேஷ் இயக்கத்தில் மட்டுமே நடிப்பேன் என்றேன். எனவே 'அன்புசெல்வன்' திரைப்படத்தின் விளம்பரங்களை நிறுத்த வேண்டும்" என்று கூறியுள்ளார்.

# 'மழை பிடிக்காத மனிதன்'



தமிழ்த் திரையுலகில் இசையமைப்பாளராக அறிமுகமாகிய விஜய் அன்டனி, நடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார். 'அக்னி சிறகுகள்', 'காக்கி', 'தமிழரசன்', 'பிச்சைக்காரன் 2', 'கொலை' போன்ற திரைப்படங்கள் விஜய் அன்டனி கைவசம் உள்ளன.

இதுதவிர, கோலிசோடா இயக்குநர் விஜய் மில்டன் இயக்கத்தில் உருவாகும் 'மழை பிடிக்காத மனிதன்' என்கிற திரைப்படத்திலும் ஹீரோவாக நடித்து வருகிறார்.

இந்த நிலையில், இந்தத் திரைப்படத்தில் நடிகர் சரத்குமாரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

இதில் அவர் விஜய் அன்டனிக்கு நண்பராக நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. இதன்மூலம் விஜய் அன்டனியும் சரத்குமாரும் முதன்முறையாக இணைந்துள்ளனர்.

ஏற்கெனவே இரண்டு கட்ட படப்பிடிப்பு முடிந்துள்ள நிலையில், அடுத்த கட்டப் படப்பிடிப்பை வருகிற டிசெம்பர் மாதம் நடத்த படக்குழு திட்டமிட்டுள்ளது.

# மோகன்லாலின் தயாரிப்பாளர் அதிரடி



மலையாள திரையுலகில் முன்னணி நடிகரான மோகன்லால் நடித்த 'திரிஷ்யம் 2' திரைப்படம் கடந்த பெப்ரவரி மாதம் நேரடியாக ஓடிடியில் வெளியாகி வரவேற்பைப் பெற்றது.

இதனால் மோகன்லால் நடிப்பில் பிரம்மாண்ட பட்ஜெட்டில் தயாராகி உள்ள 'மரைக்காயர் அரபிக்கடலின் சிங்கம்' என்கிற சரித்திர திரைப்படத்தையும் ஓடிடியில் வெளியிடப்போவதாக தயாரிப்பாளர் அன்டனி பெரும்பாவூர் அறிவித்துள்ளார்.

இதுதவிர, அதே தயாரிப்பாளரின் தயாரிப்பில் மோகன்லால் நடித்து வரும் 'புரோ டாடி', 'டுவெல்த் மேன்', 'அலோன்', புலிமுருகன் இயக்குநர் இயக்கும் திரைப்படம் என மேலும் 4 திரைப்படங்களையும் நேரடியாக ஓடிடியில் வெளியிட அவர் முடிவு செய்துள்ளாராம்.

இந்தத் திரைப்படங்களை திரையரங்குகளில் திரையிட்டு 21 நாள்களுக்கு பிறகு ஓடிடியில் வெளியிட திரைப்படக்குழுவினர் அனுமதி கேட்டுள்ளனர்.

எனினும், திரையரங்கு உரிமையாளர்கள் அதனை ஏற்காமல் 80 நாள்களுக்கு பிறகே ஓடிடிக்கு கொடுக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்ததால் திரையரங்குக்கு பதிலாக ஓடிடியில் வெளியிடும் முடிவை எடுத்து இருப்பதாக தயாரிப்பாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை

### கனமழை, வெள்ளம்:

# தமிழகத்தை புரட்டுகிறது

### 47 கால்நடைகள் உயிரிழப்பு

தமிழகத்தில் தொடர் கனமழை, வெள்ளம் காரணமாக நான்குபேர் உயிரிழந்ததாக,பேரிடம் மீட்புத்துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



கனமழை, வெள்ளம் காரணமாக தத்தளித்து வரும் சென்னையில் மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்தை தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மீட்பு துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர் ராமச்சந்திரன் ஆய்வு செய்தார்.

அங்கு நடந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர் ராமச்சந்திரன் மேலும் கூறியதாவது: "தமிழகத்தில் கொட்டித் தீர்த்த கனமழை, வெள்ளத்தின் காரணமாக இது வரை 4 பேர் பலியாகி உள்ளனர். 47 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. சுமார் 260 வீடுகள் பாதிப்பு அடைந்தன. திடீரென்று ஏற்பட்ட வானிலை மாற்றம் காரணமாக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

புதுடெல்லி

# அத்வானியின் பிறந்தநாளுக்கு பிரதமர், துணை ஜனாதிபதி வாழ்த்து

பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் துணை பிரதமருமான எல்.கே. அத்வானி நேற்று (08) தனது 94ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். இதையொட்டி அவருக்கு பல்வேறு கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்தநிலையில், எல்.கே.அத்வானியின் பிறந்தநாளை முன்னிட்டு பிரதமர் மோடி, துணை ஜனாதிபதி வெங்கையாநாயுடு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தனர். அப்போது




அத்வானியின் இல்லத்தில் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. உள்துறை அமைச்சர் அமித்ஷா உடனிருந்தார்.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில், 'மரியாதைக்குரிய அத்வானிக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். அவரது நீண்ட ஆயுளுக்கும் ஆரோக்கியத்துக்கும் பிரார்த்திக்கிறேன். மக்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் நமது கலாசாரப் பெருமையை மேம்படுத்துவதற்காகவும் அவர் மேற்கொண்ட பல முயற்சிகளுக்காகவும் தேசம் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறது. அவர் தனது அறிவார்ந்த நோக்கங்களுக்காகவும் வளமான அறிவாற்றலுக்காகவும் பரவலாக மதிக்கப்படுகிறார்' என்று பதிவிட்டிருந்தார்.


ஈரோடு

### கொரோனா மூன்றாவது அலை

# பாதிப்பு குறைவாகவே இருக்கும்

கொரோனா மூன்றாவது அலை வந்தாலும், நமக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு மிக மிக குறைவாகவே இருக்கும், என, இந்திய மருத்துவ சங்கத்தின் தேசிய தலைவர் டொக்டர் ஜெயலால் தெரிவித்தார்.

இது தொடர்பில் இந்தியா முழுதும் அலோபதி மருத்துவம் சார்பில், கொரோனா நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் விரைவில் நடமாடும் வாகனம் வாயிலாக, கிராமங்கள் தோறும் சென்று, புற்று



நோயாளிகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்க, ஒரு பஸ் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவில் கொரோனா மூன்றாவது அலை வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆனால், அந்த அலையால் நமக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு மிக மிக குறைவாகத்தான் இருக்கும். அதற்கு காரணம் ஏராளமானோர், கொரோனா தடுப்பூசி செலுத்தி உள்ளனர். கொரோனா நோய்க்கான மாத்திரை, அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நாங்கள் அதை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய அரசின் ஆணை, சுகாதாரத் துறை அனுமதித்தால் மட்டுமே, மாத்திரையை பயன்படுத்துவோம். இவ்வாறு அவர் கூறினார்.

ஒசூர்

# பணத்துக்காக பழ வியாபாரி மகன் கொலை

பணத்துக்காக பழ வியாபாரி மகனை கொலை செய்து கால்வாயில் வீசியெறிந்த சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாரதிநகரிலுள்ள, திருமண மண்டபங்களுக்கு பழங்கள் விநியோகிக்கும் வியாபாரியிடம் சாரதியாக ஒருவர் பணியாற்றினார். இவர் சில மாதங்களுக்கு முன், வியாபாரியிடம் மூன்று இலட்சம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார். வேலையை விட்டு சென்றும் கடனை திருப்பிக் கொடுக்கவில்லை.

வியாபாரியிடம் நிறைய பணம் இருப்பதை தெரிந்து கொண்ட விநியோகத்தரின் சாரதி, அதைப் பறிப்பதற்கு தன் சகோதரனுடன் சேர்ந்து திட்டம் தீட்டினார். இருவரும் விநியோகத்தரின் மகனைக் கடத்தி பணம் பறிக்க முடிவு செய்தனர்.

அன்று மகன் பட்டாசு வாங்கி வர, ஓசூருக்கு செல்வதாக தாயிடம் கூறிச் சென்றார். மகனைச் சாரதியும் சகோதரனும் தங்கள் சகோதரி வீட்டில் பட்டாசு குறைந்த விலைக்கு கிடைக்குமென கூறி, அங்கு அழைத்து சென்று, அறையில் அடைத்தனர்.

சத்தம் வெளியே வராமல், வாயை பிளாஸ்டரால் ஒட்டினர். கை, கால்களை கட்டினர். விநியோகத்தரின் மகன், தப்ப முயற்சித்து கூச்சலிட்டதால், அவரது கழுத்தை நெரித்து கொலை செய்தனர். அதன்பின் அவரது தந்தையை, தொலைபேசியில், தொடர்பு கொண்ட அவர்கள், "உங்கள் மகனை கடத்தியுள்ளோம். அவரை விடுவிக்க வேண்டுமானால் 50 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும்" என, மிரட்டினர்.

இது குறித்து, பொலிஸாருக்கு தகப்பன் முறைப்பாடு செய்ததும், பொலிஸார் விசாரணையை ஆரம்பித்த தகவல் கிடைத்ததும், பயந்த கொலையாளிகள், மகனின் உடலை கோணிப்பையில் திணித்து, அருகிலுள்ள மழைநீர் கால்வாயில் வீசிவிட்டு தப்பினர். பிளாஸ்டிக், காகிதம் சேகரிப்போர், கால்வாயில் கோணிப்பை மிதப்பதை பார்த்து, அதை பிரித்து பார்த்த போது, சடலமிருப்பதை கண்டு, பொலிஸாரிடம் தகவல் தெரிவித்தனர். விசாரணையில் அது மகனின் உடல் என்பது தெரிந்தது.

புதுச்சேரி

# 1,000 ஏக்கர் நெற்பயிர் மூழ்கியது

புதுவையில் கடந்த ஒரு வாரமாக தொடர் மழை பெய்து வருகிறது. புதுவையையொட்டிய தமிழக பகுதியிலும் தொடர் மழை பெய்வதால் வீடுர், சாத்தனூர் அணைகள் நிரம்பியுள்ளன. அணை நீர் வெளியேற்றப்படுவதால் மலட்டாறு, சங்கராபரணி ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு செல்கிறது. தொடர்ந்து விடிய விடிய மழை பெய்து வருவதால், தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளது. புதுவையின் கிராமப்புற பகுதிகளில் வெள்ளம் விவசாய நிலங்களில் புகுந்துள்ளது. 1,000க்கும் அதிகமான ஏக்கரில் மழைநீர் தேங்கியுள்ளது. இதனால் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழுகி வருகின்றன.

இதேபோல், மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள், கருணைக்கிழங்கு, வாழை, கரும்பு, காய்கறிகள் பயிரிடப்பட்டிருந்த குச்சிபாளையம், சிலுக்காரிபாளையம், பி.எஸ்.பாளையம், மணலிப்பட்டு, கலிதீர்த்தாள்குப்பம், சோம்பட்டு, திருக்கனூர், கொடாத்தூர் உள்ளிட்ட கிராமப்புற பகுதிகளிலும் 100க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் நீரில் மூழ்கி பயிர்கள், கிழங்குகள், அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாய நிலத்துக்குள் புகுந்த மழை நீரை வெளியேற்ற முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.






# பஸ்ஸைக் கடத்தி தீவைப்பு

இரண்டடுக்கு பயணிகள் பஸ்ஸை, நால்வர் கடத்திச் சென்று தீயிட்டு கொளுத்திய சம்பவம், அயர்லாந்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது,

நேற்று முன்தினம் (7) இடம்பெற்ற இச்சம்பவத்தில், பஸ்ஸைக் கடத்திச் சென்ற நால்வர் கொண்ட குழுவொன்று, அப்பஸ்ஸில் பயணித்த பயணிகளை மிரட்டி வெளியேற்றியதாகவும், பின்னர் பஸ்ஸை தீயிட்டுக் கொளுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த தீயணைப்பு மற்றும் மீட்புக்குழுவினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு அயர்லாந்து நெறிமுறைக்கு எதிரான வெளிப்படையான எதிர்ப்பு இதுவென தெரிவித்துள்ள அந்நாட்டுப் பொலிஸார், இதுகுறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.




## வாலுடன் பிறந்த குழந்தை

குழந்தையொன்று 12 சென்டி மீற்றர் நீளமான வாலுடன் பிறந்த சம்பவம் பிரேஸிலில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரேஸிலின், ப்போர்டாலிஸா நகரில் உள்ள வைத்தியசாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இக்குழந்தையின் பின்பகுதியில் 12 சென்டி மீற்றர் வால் ஒன்று இருந்துள்ளதோடு அதன் முடிவில் பந்து போன்ற அமைப்பு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இக்குழந்தையின் வால் நரம்பு மண்டலத்துடன் இணையாமல் இருந்ததால் எந்தவித சிக்கலும் இன்றி பெற்றோர்களின் சம்மதத்தோடு அறுவை சிகிச்சை மூலம் வாலை வைத்தியர்கள் அகற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து வெளியான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## மெக்சிகோவில் கோர விபத்து; 19 பேர் உயிரிழப்பு

மெக்சிகோவின் நகர் பகுதியை பியூப்லா மாநிலத்துடன் இணைக்கும் நெடுஞ்சாலையில் கனரக வாகனமொன்று சுங்கச்சாவடி மீது மோதி விபத்துக்குள்ளானதில் 19 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கனரக வாகனமானது வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையே இவ்விபத்துக்கான காரணமென அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்ற இக்கொடூர விபத்தில் சுங்கச்சாவடி அருகே நின்ற வாகனங்கள் பல தீப்பற்றி எரிந்துள்ளதாகவும், இதில் 19 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாகவும், மூவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## ஏலத்தில் 'மோனாலிசா'

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில், 400 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த 'மோனாலிசா' ஓவியத்தின் பிரதியொன்று ஏலத்தில் விடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1503ஆம் ஆண்டு லியோனார்டோ டா வின்சியால் வரையப்பட்ட உலகப்புகழ் பெற்ற மோனாலிசா ஓவியம் பாரிஸில் உள்ள லூவார் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், மோனாலிசா ஓவியம் வரையப்பட்ட சில ஆண்டுகளிலேயே மேலும் சில ஓவியர்கள் அதைப் போலவே அச்சசலான பிரதிகளைத் தீட்டினர்.

அவ்வாறு தீட்டப்பட்ட பிரதி ஓவியம் ஒன்று கடந்த ஜூன் மாதம் இலங்கை மதிப்பில் சுமார் 68 கோடி ரூபாய்க்கு ஏலம் போனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது பாரிஸில் உள்ள 400 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மற்றொரு பிரதி ஓவியம் ஏலத்தில் விடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## கார்பனை உறிஞ்சும் பலூன் கண்டுபிடிப்பு

உலக வெப்பமயமாதலை தடுக்கும் விதமாக, காற்றில் இருக்கும் காபனீரொட்சைட்டை உறிஞ்சும் பலூனை இஸ்ரேலைச் சேர்ந்த 'ஹை ஹோப் லேப்' (high hopes labs) என்ற தனியார் நிறுவனம் உருவாக்கி உள்ளது.

குறித்த பலூனானது தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறி காற்றில் கலக்கும் காபனீரொட்சைட்டை மீண்டும் திட நிலைக்கு கொண்டு வந்து, மறுசுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, தரையில் இருந்து 50 கிலோ மீற்றர் வானத்தில் காற்றிலிருக்கும் காபனீரொட்சைட்டை 80 பாகை செல்சியஸ் தட்பவெட்பத்தில் திரவ நிலையில் இருந்து திடமான நிலைக்கு மாற்றி அதை உறிஞ்சி பழைய நிலைக்கு கொண்டு வரமுடியும் என அந்நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# வெஸ்ட் ஹாமிடம் தோற்ற லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் தோற்றது.

லிவர்பூல் சார்பாக, ட்ரெண்ட் அலெக்ஸான்டர்-அர்னோல்ட், டிவோக் ஒரிஜி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். வெஸ்ட் ஹாம் சார்பாக, பப்லோ பொர்னல்ஸ், கேர்ட் ஸூமா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் கிடைக்கப் பெற்றிருந்தது.

இதேவேளை, எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சமப்படுத்தியிருந்தது.

இந்நிலையில், லீட்ஸ் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியிருந்தது. லீட்ஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை றபின்ஹா பெற்றதோடு, லெய்செஸ்டர் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹார்வி பார்ண்ஸ் பெற்றிருந்தார்.




### நெஸ்டமோல்ட் சைக்கிள் சவால்:

## வென்றார் இராணுவத்தின் டில்ஷான்

கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நெஸ்டமோல்ட் சைக்கிள் சவாலில், ஆண்களுக்கான திறந்த 30 கிலோ மீற்றர் பிரிவில் இராணுவத்தின் டில்ஷான் குமார வென்றார்.

200க்கும் மேற்பட்ட தொழில்முறை சைக்கிளோட்ட வீரர்கள் பங்கேற்ற இப்போட்டியில் இரண்டாமிடத்தை தென் சைக்கிள் கழகத்தின் றொஷேன் மதுஷானக பெற்றதோடு, மூன்றாமிடத்தை இராணுவத்தின் எச்.கே.என்.எல் வண்ஷபிரியா பெற்றிருந்தார்.

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் வழிநடத்தலில் இலங்கை சைக்கிள் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட இப்போட்டிக்கு நெஸ்டமோல்ட் அனுசரணை வழங்கியிருந்தது.

## தேசிய அணிக்கான வீராங்கனைகள் தெரிவு முகாம்

■ எம்.யூ.எம். சனூன்

19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தெற்காசிய கால்பந்தாட்டத் தொடரானது அடுத்த மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ளது.

இத்தொடருக்கான தேசிய மகளிர் அணிக்காக வேண்டி வடமேல் மாகாண அணிக்கான முதல் கட்ட தெரிவு முகாம் அண்மையில் குருநாகல் வெஹர மைதானத்தில் நடைபெற்றது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் இணைப்பாளர்களான புத்தளம் ஆசிரியர் எம்.எம்.எம். ஹுமாயூன், குருநாகல் ஆசிரியர் சத்தியராஜ், கேகாலை ஆசிரியர் ஜுலட் ஆகியோர் மகளிர் அணி தெரிவில் கலந்து கொண்டனர். வடமேல் மாகாணத்தில் 35 வீராங்கனைகள் இந்த தெரிவு முகாமில் கலந்து கொண்டதில் எட்டு வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த ஆசிரியர் ஹுமாயூன், இறுதித் தெரிவு இம்மாதம் கொழும்பில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.





## மெக்ஸிக்க குரான் பிறீ: வென்றார் வெர்ஸ்டப்பன்

நேற்று அதிகாலை நடைபெற்ற மெக்ஸிக்க குரான் பிறீயை, றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார்.

பந்தயத்தை மூன்றாமிடத்திலிருந்து ஆரம்பித்த நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பன், முதலாவது வளைவிலேயே மெர்சிடீஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன், வல்ட்டேரி போத்தாஸை முந்தி பந்தயத்தை வென்றிருந்தார்.

### இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# ஸ்கொட்லாந்தை வீழ்த்திய பாகிஸ்தான்


சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஸ்கொட்லாந்துடனான குழு இரண்டு சுப்பர் 12 போட்டியில் பாகிஸ்தான் வென்றது. நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 189/4 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 66 (47), ஷொய்ப் மலிக் ஆ.இ 54 (18), மொஹமட் ஹஃபீஸ் 31 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹம்ஸா தஹிர் 1/24 [4])

ஸ்கொட்லாந்து: 117/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றிச்சி பெரிங்டன் ஆ.இ 54 (37) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷடாப் கான் 2/14 [4], ஷகீன் ஷா அஃப்ரிடி 1/24 [4], ஹரிஸ் றாஃப் 1/27 [4], இமாட் வசீம் 0/17 [4], ஹஸன் அலி 1/33 [4])

போட்டியின் நாயகன்: ஷொய்ப் மலிக்

இந்நிலையில், மற்றைய குழு இரண்டு போட்டியில் ஆப்கானிஸ்தானை வென்ற நியூசிலாந்து அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற, இந்தியாவும், ஆப்கானிஸ்தானும் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தன.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 09 நவம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.